# கல்கி இதழின் புறக்கட்டமைப்பு

# கல்கி இதழின் புறக்கட்டமைப்பு

ஒரு சமுதாயத்தின் அமைப்பை அதன் அரசியல், பொருளியல், சமூகவியல் போன்ற துறைகள் மட்டும் கட்டமைப்பதில்லை. அச்சமுதாயத்தில் தோன்றும் இலக்கியங்களும், தொடர்புச்சாதனங்களும் அவற்றின் ஆளுமைகளும் இணைந்தே கட்டமைக்கின்றன. அவ்வகையில் சமுதாயத்தோடு நெருங்கிய தொடர்புடையதும், மக்களின் எண்ண வளர்ச்சியினை ஊக்குவிப்பதுமான பத்திரிகைத் துறைகள் எண்ணிலடங்கா வளர்ச்சியினைக் கண்டுள்ளது. கால மாற்றத்திற்கேற்ப பத்திரிகைத்துறையில் புதுப்புது வடிவங்கள் தோன்றினாலும் அவை அனைத்துமே மக்களின் சமூக நலனை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

சமூக நலனோடு மக்களின் சிந்தனைகளைச் செம்மைப்படுத்தவும், அவர்களின் எண்ண வளர்ச்சியினை மேம்படுத்தவும் செய்யும் துறைகளில் பெரும்பங்கினை பத்திரிகைத் துறைகள் ஆற்றிவருகின்றன. அவற்றிலும் குறிப்பிட்ட கால அளவில் தொடர்ச்சியாக வெளிவரும் வாரப்பத்திரிகைகள் மக்களின் அறிவுத்திறனை மேம்படுத்தவும் அவர்களின் உலக அறிவை மேம்படுத்தவும், கலையிலக்கியங்களுடனான ஒரு பரிச்சியத்தை ஏற்படுத்தவும் பெரும்பங்கினை ஆற்றிவருகின்றன.

வாரப்பத்திரிகைகள் இலக்கிய வளர்ச்சிக்கென பெரும்பங்கினை ஆற்றிவருவதோடு மக்களை தொடர்வாசிப்பில் ஈடுபடுத்தவும், சமுதாய நடைமுறைச் சிக்கல்களை அறிந்து கொள்ளவும், மக்களின் நினைவாற்றலையும், கற்பனைத்திறனையும் வளர்க்க உதவிபுரிகின்றன. மேலும் எண்ணற்ற எழுத்தாளர்களுக்கு வாய்பளிப்பதுடன் புதுவகையான இலக்கிய வளர்சிக்கும் வாரப்பத்திரிகைகள் வித்திடுகின்றன. அரசியல் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதன் வாயிலாக மக்களின் அரசியல் நிலைப்பாடுகளையும் அறிந்துகொள்ள இயலும். இதற்கு உறுதுணையாக அமைவது அப்பத்திரிகையின் அமைப்பு முறைகளேயாகும்.

வாரப்பத்திரிகைகளின் அமைப்புமுறைகளை ஆய்வு செய்யும்பொழுது அவற்றை இருநிலைகளில் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஒன்று பத்திரிகையின் வடிவம் சார்ந்த அமைப்புமுறை. மற்றொன்று பொருள்சார்ந்த அமைப்புமுறை. அவ்வகையில் வாரப்பத்திரிகைகளின் வடிவம் சார்ந்த இவ்வமைப்புப் பற்றியும், கல்கி இதழில் இவ்வமைப்பினைக் குறித்தும், அவை செய்திகளை வெளிப்படுத்தும் (புற அமைப்பு) அமைப்பு குறித்தும் இவ்வியலில் ஆராயப்படுகின்றது.

## இதழ்கள்

"தகவல் தொடர்பு என்பது ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் செய்திகளையோ, கருத்துக்களையோ, பொழுதுபோக்கு அம்சங்களையோ வழங்குவதாகும். காட்சி, எழுத்து, பேச்சு போன்ற எந்த வடிவத்தில் அமைத்தாலும் மக்கள் தகவல் தொடர்பு முறையின் வெற்றியானது அதன் அமைப்பாளர் செய்தியைப் பெறுவோரின் சிந்தனையைத் தூண்டி, உணர்வுகளை எழுப்பி செயல்பட வைக்கும் திறமையினைப் பொறுத்தே அமையும்" (மா.ரா. இளங்கோவன், இந்திய இதழ்கள், ப.32)

ஒரு செயலைத் தூண்டுவதற்குக் காரணமாக அமைவன தொடர்புச் சாதனங்களேயாகும். அவை மக்களை மகிழ்விக்க, அறிவுறுத்த, கற்பிக்க மட்டும் அல்லாமல் மனித வாழ்க்கையின் ஒரு பகுதியாகிவிட்டன.

மக்கள் தொடர்புச் சாதனங்களில் தலையாய இடத்தினைப் பெறுவது இதழ்களேயாகும். தான் சொல்ல வேண்டிய கருத்தை தெளிவாகவும், சுருக்கமாகவும் சொல்வதற்கு பெரும்துணையாக அமைவன இதழ்களேயாகும். இதழ்கள் என்பவை பல்வேறு வடிவங்களில் அவை வெளிப்படுத்தும் செய்திகளுக்கு ஏற்ப தோற்றம் பெறுகின்றன. எனினும் அவை சமுதாயம் சார்ந்த நன்மையினை வெளிப்படுத்தும் போது அவற்றின் தரம் கூடுகின்றது. இதழ்களில் ஒவ்வொரு படைப்பாளனும் தன்னுடைய படைப்புகளை வெளியிட இயலும். ஒரு குறிப்பிட்ட திறன் கொண்டவனை மட்டும் இதழ்கள் அனுமதிக்கவில்லை. அனைத்துப் படைப்பாளனுக்குமான ஒரு அனுபவ திறவுகோலை இதழ்களே வெளிப்படுத்துகின்றன.

## இந்திய இதழ்களின் தோற்றம்

ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்து இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் இதழ்கள் தோன்றியது. 1766 - ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த ஆங்கிலேய உயர் அதிகாரியான வில்லியம் போல்ட்ஸ் என்பவர் இந்தியாவிற்கு பத்திரிகை தேவை என்பதை உணர்ந்தார். இந்தியாவில் "இதழ்கள் இல்லாத குறையால் வணிக வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் தடைப்படுகிறது. ஒவ்வொரு பிரிட்டிஷ் குடிமகனுக்கும் இதழ் வேண்டுவதாகும்" (மேலது, ப.71) எனக் குறிப்பிட்டார். இது நடந்து பதிநான்கு ஆண்டுகள் கழித்து 'பெங்கால் கெஜட்' எனும் வார இதழ் முதன் முதலில் தோன்றியது.

இந்தியாவில் தோன்றிய முதல் இதழான 'பெங்கால் கெஜட்' இதழை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் 1780 – ஆம் ஆண்டு ஜனவரி 29-ஆம் நாள் கல்கத்தாவில் தொடங்கினார். இவ்விதழ் 'பெங்கால் கெஜட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வடைசர்' (Bengal Gazatte or General Advertiser) என அழைக்கப்பட்டது.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி இதழ் தொடங்கியதன் காரணம் பற்றிக் குறிப்பிடுகையில் "செய்திகளை எளிதாகப் பரவச்செய்வது இந்த இதழின் (பெங்கால் கெஜட்) நோக்கமாக இருக்கும். அவை பயன் உள்ளனவாகவும், துணை செய்வனவாகவும், தனிப்பட்டோருக்கு ஊக்கம் தருவனவாகவும் இருக்கும்" என முதலிலேயே மக்களுக்குத் தெரிவித்து விடுகிறார்.

செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்கும் இதழாக மட்டுமில்லாமல் தவறு செய்பவர்களை மக்களுக்கு வெளிக்காட்டும் இதழாகவும் இவ்விதழ் செயல்பட்டது. வினோதமான விளம்பரங்கள் வாயிலாகத் தவறு செய்பவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்ததோடு தற்கால நாளிதழ்கள் போன்று நாட்டின் நிகழ்வுகளை விமர்சனம் செய்யும் இதழாகவும் 'பெங்காள் கெஜட்' விளங்கியது.

18 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் வெளியான இதழ்களின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் ஒரு மாத இதழும், 23 வார இதழ்களும் வெளிவந்தன. இவ்விதழ்களில் வெளியானவை இந்தியாவில் வாழும் ஆங்கிலேயர்களின் பிரச்சினைகளைப் பற்றிய தலையங்கங்களும், இங்கிலாந்தில் நடைபெறும் நிகழ்சிகளின் தொகுப்பும் இவ்விதழ்களின் உள்ளடக்கப் பொருளாக இருந்தது. மேலும் "இராணுவ விபரங்கள், இந்திய மன்னர்களின் போக்கு, வெளிநாடுகளில் கிடைத்த செய்திக் குறிப்புகள், ஆசிரியருக்குக் கடிதங்கள், கவிஞர்பக்கம், நாகரீகக்குறிப்புகள், அரசாங்க அறிவிப்புகள், சமுதாயச் செய்திகள், விளம்பரங்கள் போன்றனவும் இவ்விதழ்களில் வெளிவந்தன. பாராளுமன்றச் செய்திகளும், ஆங்கிலேயரது பிரச்சினைகளும் தலையங்கப் பகுதியாயின" (சுசித்திரா). மேலும் அக்கால இதழ்கள் செய்தி இதழ்களாகவே காணப்பட்டன. அவற்றில் பொழுது போக்குத்தன்மைகள் காணப்படவில்லை. இதனை அதன் உள்ளடக்கத் தன்மையினைக் கொண்டு அறியலாம்.

## 19 - ஆம் நூற்றாண்டில் இதழ்கள்

19-ஆம் நூற்றாண்டில் வந்த இதழ்கள் வெறும் செய்தினைக் கூறும் இதழ்களாக மட்டும் அல்லாமல் சமயம், இலக்கியம் கலை, கட்டுரை பற்றிய செய்திகளையும் வெளியிடத் தொடங்கின. இதற்குக் காரணம் மதபோதகர்களே ஆவர். இந்தியாவில் தங்கள் மதத்தைப் பரப்ப எண்ணியபோது அவர்கள் இந்திய மொழிகளை அறிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. தம் மதக்கருத்தை இந்திய மொழியிலேயே வெளியிடத் துவங்கினர். இதற்கு அவர்களுக்கு உறுதுணையாக அமைந்தது வார, மாத இதழ்களேயாகும். இதன் மூலம் இந்திய மதக்கருத்துக்களையும், கோட்பாடுகளையும் குறைத்து எழுதத் தொடங்கினர். இதற்கு அவர்களுக்கு பெருந்துணையாக இருந்தது 'சமாச்சார் தர்பன்' என்ற வார இதழாகும்.

செராம்பூர் பாதிரிமார்கள் 'சமாச்சார் தர்பன்' என்ற வார இதழை 1819-ஆம் ஆண்டு வங்காளத்திலிருந்து வெளியிட்டனர். பல்வேறு மொழிகளில் இதழ்கள் தோன்றுவதற்கு இவ்விதழே காரணமாகும். இவ்விதழ் இந்து மதத்தின் தத்துவக் கோட்பாடுகள் குறித்து தவறாகக் கூறியதுடன், தம் மதம் குறித்தான சிறப்பினையும் வெளியிடத் தொடங்கியது. இவ்விதழின்

கருத்துக்கு எதிராகவும், இந்து மதத்தின் புனிதம் குறித்தும் விளக்க எண்ணி இராஜராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுகி'என்ற வார இதழில் கட்டுரைகளை வெளியிட்டார். இவ்விதழ் தாராசந்த்தத், பவானி சரண் பண்டோபாத்யாயா என்ற இருவராலும் 1821- ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் இந்திய மொழி இதழ் என்ற பெருமைக்குரியது இவ்விதழ்.

இக்காலகட்டத்தில் தோன்றிய இந்திய மொழி வார இதழ்கள் செய்தியினை மட்டும் வெளியிடும் இதழ்களாக இல்லாமல் மதக் கருத்துக்களைத் தாங்கிவரும் இதழ்களாகவும் காணப்பட்டன. சென்னையில் பெர்சிவல் பாதிரியார் 'தின வர்தமானி' என்ற தமிழ் வாரஇதழை 1833-இல் தொடங்கினார். இவ்விதழில் பயனுள்ள பல செய்திகள் இடம்பெற்றதோடு, இலக்கியம், மதச்சார்புடைய கட்டுரைகள் போன்றவற்றையும் வெளியிட்டது. கிறித்துவக் கம்பன் என்றழைக்கப்படும் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை தமது 'இரட்சணிய யாத்திரிகத்தை' இவ்விதழில் வெளியிட்டார். இவ்விதழ் செய்தியோடு, இலக்கியம், சமயக் கருத்துக்களைத் தாங்கி 1857 வரை வெளிவந்தது.

சாதி ஒழிப்பு, சமயச் சீர்திருத்தம், இலக்கியச்செய்திகளை மட்டும் வெளியிட்டு வந்த இந்திய இதழ்கள் 1857-இல் ஏற்பட்ட சிப்பாய்கலகத்தின் எதிரொலியாக அரசியல் உணர்வு கொண்டு வெளிவரத் தொடங்கின. இந்திய மக்களின் ஒற்றுமை வளர்க்க இக்கால கட்டத்திய இதழ்கள் முனைப்புடன் செயல்பட்டன. அத்தகைய இதழ்களில் 'ஃபிரண்ட் ஆப் இந்தியா (Friend of India)', 'பாம்பே டைம்ஸ்' (Bombay Times), 'சாம்பிரகாஷ்' (Sam Prakash) போன்றவை குறிப்பிடத்தக்க இதழ்களாகும். இதுபோன்று இந்திய மக்களின் கருத்துக்களை எடுத்துரைக்கும் இதழ்களை தடுத்து நிறுத்த ஆங்கில அரசு 'வாய்ப்பூட்டுச் சட்டத்தைக்' (Gagging Act) 1857-இல் கொண்டு வந்தது.

1885-இல் இந்தியக் காங்கிரசின் தோற்றதின் பின்னர் வார இதழ்களின் வளர்ச்சியில் ஒரு புதிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக வார இதழ்கள்

தோற்றம் பெற ஆரம்பித்தன. அச்சுப் பொறி, கம்பியில்லாத் தந்தி, கடலடித் தந்தி போன்றவற்றின் வளர்ச்சி இதழ்களின் வளர்ச்சியை அதிகப்படுத்தியது.

## தமிழ் இதழியல் வரலாறு

மக்களின் அறிவு வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி போன்றவை மக்களின் எண்ணங்களில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியதன் விளைவாய் இதழ்களும் வளர்ச்சியடைந்தன. காகிதம் என்ற சொல்லானது 'காகித்' என்ற உருதுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. பல இதழ்கள் கொண்டது மலர். அவற்றைப் 'பத்திரம்' என்று வடமொழியில் கூறுவர். இச்சொல்லிலிருந்து தோன்றியதே 'பத்திரிகை' என்ற சொல். இதனை நாளிகை-இதழ், ஏடு-தாள் என்றும் கூறலாம். இத்தகைய இதழ்களை அவை வெளிவரும் கால இடைவெளியினை அடிப்படையாகக் கொண்டு நாளிதழ், வாரஇதழ் எனப் பலவகைகளில் கூறுவர்.

இதழ்கள் தொடக்க காலகட்டத்தில் சமயச்சார்புடையனவாகவும், கொள்கைச் சார்புடையனவாகவும், கட்சி சார்புடையனவாகவும் வெளிவந்தது. அக்கால இதழ்களின் நடையமைப்பானது அக்காலச் சூழ்நிலை, அமைப்பு, ஆசிரியரின் கல்வி, மொழி ஈடுபாடு மற்றும் கொள்கை சார்ந்தே அமைந்திருந்தன. மேலும் அக்கால இதழாசிரியர்கள் இதழ்களின் மூலமாக விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தவும் அதற்கான சிந்தனைகளை மக்களிடம் வளர்ப்பதிலேயும் செலவிட்டனர். கொள்கைக்காகப் போராடிய அவர்கள் வருவாய் தொடர்பான சிந்தனைகளை கவனத்தில் கொள்ளவில்லை.

தமிழில் தோன்றிய இதழ்கள் முதலில் மாத இதழாகவும் பின்னர் வார இதழாகவும், நாளிதழாகவும், மாதம்மிருமுறை மற்றும் மும்முறை இதழ்களாகவும் தோன்றியுள்ளன. 1830 - ஆண்டின் காலகட்டம் தொடங்கி தமிழ் இதழ்களின் வளர்ச்சியனை நான்கு கட்டமாக பிரித்துக்காண இயலும்.

1. 1830 – 1859 (சிப்பாய் கலகத்திற்கு முன்புவரை)
2. 1860 – 1900 (வாய்பூட்டுச்சட்டம் கொண்டுவரல் - பத்திரிகை வளர்ச்சி தடைபட்டது)

3. 1901 – 1942 (சமயம்,அரசியல், சமூக இதழ்கள் புற்றீசல் போல் வெளிவரல்)

4. 1943 – முதல் இன்று வரை. (அரசியல், சமூகம், அறிவியல் என அனைத்து துறைகளிலும் இதழ்கள் வளர்ச்சியடைந்து வருகின்றது.

## தமிழ் இதழியலில் கல்கியின் இடம்

இதழ்களின் வகைகளை கால அடிப்படைக் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது 'கல்கி' இதழ் ஒரு 'பருவ இதழ்' ஆகும். கல்கி வெளிவரும் கால அடிப்படையாக அதனை வார இதழ் என்று அழைக்கலாம். ஆரம்பிக்கப் பட்ட கால அடிப்படையை நோக்கும் போது கல்கி 'விடுதலைக்கு முந்தைய இதழ்கள்' வரிசையில் அடங்கும். இந்திய விடுதலைக்கு பாடுபட்ட இதழ்களில் தமிழகத்தில் தேசிய உணர்சியை ஊட்டிய அளவில் இதனை 'தேசிய இயக்க இதழ்' என்றும் குறிப்பிடலாம். உள்ளடக்கத் தன்மை அதிகமாகக் காணப்படுகின்ற காரணத்தால் இதை ஓர் 'பொழுது போக்கு இதழ்' என்ற வகையிலும் குறிப்பிடலாம். எல்லா வகையான இலக்கியங்களும் இடம்பெற்று இருப்பதால் இதனை 'இலக்கிய இதழ்' என்றும், சமுதாயப் பயனைத் தரும் 'சமுதாய இதழ்'என்றும், அவை வெளிப்படுத்தும் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு 'தரமான இதழ்' என்றும் குறிப்பிடலாம். அவ்வகையில் கல்கி இதழியல் வளர்ச்சி நிலையில் கவனிக்கப் படவேண்டிய இதழாகவும், இதழியல் துறைகளில் முக்கியமான இதழாகவும் விளங்குகின்றது.

## கல்கி இதழின் தோற்றம்

ஆனந்த விகடனில் பணியாற்றி வந்த ரா. கிருஷ்ண மூர்த்தி தேச விடுதலைக்காக சிறை சென்று திரும்பிய பின்னர் திரு. சதாசிவம் அவர்களுடன் இணைந்து ஒரு இதழைத் தொடங்க எண்ணினார். அதற்கான நிதியுதவியை ஆர்.கே.எஸ், மற்றும் எம். எஸ்.சுப்புலட்சுமி போன்றோர் கொடுத்தனர். கல்கி தொடக்க காலத்தில் மாதம் இருமுறை என்றும், பின்னர் மாதம் மும்முறை என்றும், அதன்பிறகு வாரப்பத்திரிக்கையாக இன்றும் வலம் வந்துகொண்டிருக்கிறது.

கல்கி இதழுக்காக ஆண்வேடத்தில் நடிக்க விருப்பமில்லாமல் இருந்தும் நடித்து நிதிகொடுத்து உதவிய எம்.எஸ்.பற்றி " 'எப்போ்ப்பட்ட தியாகம்' என்று நன்றியோடு பலமுறை கூறி வியந்திருக்கிறார் கல்கி. சதாசிவமோ "charity begins at home" என்ற ஆங்கில மொழிக்கு ஏற்ப எம்.எஸ்ஸின் முதன் நன்கொடை கல்கி தொடங்க பயனாயிற்று என்றார்." (ராஜேந்திரன், 'துக்ளக்'-15-4-1976, ப.6)

முதல் இதழிலேயே கல்கியின் இலக்கிய நண்பர் டி.கே.சி 'கம்பர் தரும் காட்சி' என்ற தலைப்பில் இராமயணத் தொடரை ஆரம்பித்தார். அத்துடன் கல்கியின் முதல் இதழை அமரர் கல்கி எழுதினார். கல்கி மூன்று நோக்கங்களை அடிப்படையாக வைத்து செயலாற்றியது. அவை, '1. தேச நலன், 2. தேச நலன், 3. தேசநலன்' என்பனவாகும்.

கல்கி இதழ் வெள்ளிவிழாக் கொண்டாடியபோது அன்றைய இவ்விதழ் ஆசிரியராக இருந்த சதாசிவம் பின்வருமாறு குறிப்பிட்டார் "இன்றும் தமிழ் இலக்கியத்திலும, தமிழ் வளர்ச்சியிலும் சாதிக்கப்பட வேண்டியவை நிரம்ப உள்ளன என்பதை மறவாமல் விநயத்துடன் இப்பணியில் தொடர்ந்து ஈடுபடவே விரும்புகின்றோம். எனினும் தயக்கமின்றியும், நியாயமாகவும் நாம் பெருமிதம் அடையக் கூடிய ஓர் அம்சமும் உண்டு எனக் கருதுகிறோம். அது கல்கி என்ற மூன்றெழுத்துக்களை எப்படி ஒரு புனிதச் சொல்லாகப் போற்றி வந்தோமோ அதே போன்ற ஆர்வத்துடன் வேறு ஒரு மூன்றெழுத்துச் சொல்லையும் போற்றி வந்திருக்கிறோம் என்பது தான் அம்மூன்றெழுத்துச் சொல் -'தரம்' என்று கல்கி இதழின் தரநிர்ணயத்தைப் பற்றிக் கூறுகிறார்." (சுப்ரபாலன், "50 சாதனைகளின் பொன்விழா", ப.3)

## இதழ்களின் வகைகள்

ஒரு வீடு சிறப்புற அமைய வேண்டுமானால் அவ்வீட்டின் உள்ளறை, வரவேற்பறை, சமையலறை, முற்றம் என அனைத்து அமைப்புகளும் சரிவர கட்டமைக்கப்படவேண்டும். அது போன்றுதான் இதழ்களும் சிறப்புற அமைய வேண்டுமானால் அதன் அமைப்பு சார்ந்த வடிவங்களில் சிறப்புற அமைய வேண்டும். இதழ்களின் அமைப்பை அவை அமையும் பொருள்

மற்றும் வடிவம் சார்ந்த விதத்தினை அடிப்படையாகக் கொண்டு இரண்டு முறைகளில் வகைப்படுத்தலாம். அவை,

1. இதழ்களின் புற வடிவம்
2. இதழ்களின் அக வடிவம்

என்பனவாகும். இதழ்களின் பொருள் மற்றும் வடிவம் சார்ந்த இந்த அமைப்புகள் இதழ்களின் கட்டமைப்பு நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அவற்றின் தனிச்சிறப்புக்கும் காரணமாக அமைகின்றன.


பொதுவாக அச்சிடப்பட்டு வெளிவரும் அனைத்து செய்திகளையும், கருத்துக்களையும் வெளிக்கொணரும் அனைத்தினையும் நாம் இதழ்கள் என்றே பொதுவாகக் குறிப்பிடுகின்றோம். எனினும் அவற்றின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டும், அவை வெளியிடும் உள்ளடக்கக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டும் வெளிவரும் கால இடைவெளிகளின் வேறுபாட்டினாலும், அவற்றின் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் ஒவ்வொரு இதழ்களிலும் வேறுபாடு உடையனவாகவே காணப்படுகின்றன. எனினும் சில குறிப்பிட்ட அடிப்படைக் கூறுகளை மையமாகக் கொண்டு இதழ்களை மூன்று நிலைகளில் வகைப்படுத்த இயலும். அவை,

1. கால அடிப்படையிலான வகைப்பாடு
2. இதழ்களின் தன்மையடிப்படையிலான வகைப்பாடு
3. இதழ்களின் உள்ளடக்க அடிப்படையிலான வகைப்பாடு

என்பனவாகும்.

## கால அடிப்படையிலான வகைப்பாடுகள்

இதழ்கள் அவை வெளியிடப்படும் கால அளவினை அடிப்படையாகக் கொண்டு பல நிலைகளில் வகைப்படுத்த இயலும்.




## நாளிதழ்கள்

தினமும் வெளிவரும் செய்தித்தாள்களை (Newspaper), தினசரிகள் (Dailies) என்று கூறலாம். இதில் காலையில் வெளிவரும் இதழை 'காலை இதழ்' என்றும், மாலையில் வெளிவருவனவற்றை 'மாலை இதழ்' என்றும் குறிப்பிடுவர். இதில் வாரம் இருமுறை, மும்முறை வெளிவருவனவும், 'UNESCO' போன்ற செய்திவெளியீடுகளும் நாளிதழ்களாகவே கருதப்படுகின்றன.

## பருவ இதழ்கள்

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அல்லது குறிப்பிட்ட பருவங்களில் வெளிவருவதை பருவ இதழ்கள் (Magazines) அல்லது கால இதழ்கள் (Periodicals) என்று குறிப்பிடுகின்றோம். இப்பருவ இதழ்கள் வாரம் இருமுறையோ, வாரம் ஒருமுறையோ, திங்கள்

இருமுறையோ, மும்முறையோ, திங்கள் ஒருமுறையோ அல்லது காலாண்டுக்கு ஒரு முறையோ, அரையாண்டுக்கு ஒருமுறையோ, வருடத்திற்கு ஒருமுறையோ வெளிவருகின்றன.

வாரம் இருமுறை வெளிவரும் இதழ்களை வார இருமுறை இதழ்கள் என்று குறிப்பிடலாம். நக்கீரன், ஜுனியர் விகடன் போன்றவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

வாரம் ஒரு முறை வெளிவரும் இதழ்களை வார இதழ்கள் என்று குறிப்பிடுவர். ஆனந்த விகடன், கல்கி, குமுதம், தேவி, ராணி, கல்கண்டு, குங்குமம் போன்றவற்றைச் சான்றாகக் கூறலாம்.

திங்கள் இருமுறை வரும் இதழ்களுக்குச் சான்றாக 'வர்த்தகக் குரல்', 'வானொலி', 'சிநேகிதி', 'அவள் விகடன்' போன்றவற்றைக் கூறலாம்.

திங்கள் தோறும் வெளிவரும் இதழ்களை மாத இதழ்கள் எனக் குறிப்பிடுவர். 'கலைமகள்', 'அமுத சுரபி', காலச்சுவடு', உயிர்மை' போன்றவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

முத்திங்கள் இதழ்களுக்கு 'மாணவர் தியானக் குறிப்புகள்' போன்றவையும், அரையாண்டு இதழ்களுக்கு 'ஆராய்ச்சி' இதழும், ஆண்டு இதழ்களுக்கு ஆண்டுமலர்கள், வருடம் ஒருமுறை வெளியிடப்படும் பண்டிகைக் செய்திகளுடன் வெளிவரும் சிறப்பதழ்களும் அடங்கும்.

## தன்மை அடிப்படையிலான பகுப்பு

ஒரு இதழ் யாருக்காக வெளியிடப்படுகிறது என்ற தன்மையின் அடிப்படையிலும் அவற்றை பாகுபடுத்த இயலும்.

### 1. உயர்தர இதழ்கள்

ஆழமான சிந்தனைகளைத் தூண்டும் வண்ணமும், மக்களின் அறிவுத் திறனை வளர்க்கும் தன்மையிலும் வெளிவரும் இதழ்களை 'உயர்தரமான இதழ்கள்' என்ற வகையில்

வைத்து எண்ணலாம். இத்தகு இதழ்கள் ஆராய்ச்சி இதழ்களாகவோ, இலக்கிய இதழ்களாகவோ வெளிவருகின்றன. 'திராவிடமலர்', 'உயிர்மை', 'ஆராய்ச்சி', 'செந்தமிழ்ச் செல்வி' போன்ற இதழ்கள் இவ்வகையினைச் சார்ந்தனவாகும்.

## 2. மக்கள் இதழ்கள் (People Magazines)

அனைத்து தரப்பினை மக்களும் படிக்கக் கூடிய வகையில், பொழுதுபோக்குத் தன்மையுடன் எளிதில் புரியும் வண்ணமும் அமையக் கூடிய இதழ்கள் இவ்வகையினைச் சார்ந்ததாகும். இன்று தமிழில் வெளிவருகின்ற பெரும்பாலான இதழ்கள் இவ்வகையினைச் சார்ந்தவையாகும்.


## 3. நச்சு இதழ்கள்

மக்களின் மனதில் தீய எண்ணங்களை வளர்கூடிய வகையில் வெளிவரும் இதழ்களை நச்சு இதழ்கள் எனலாம், மஞ்சள் பத்திரிகைகள் (Yellow Journals) என்று இவற்றினைக் குறிப்பிடுவர்.

## உள்ளடக்க அடிப்படையிலான பகுப்பு

இதழ்கள் வெளியிடும் உள்ளடக்கக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் பாகுபடுத்திப் பார்க்க இயலும். இது பொதுவான பாகுபாடே அன்றி அவற்றின் தனிப்பட்ட இயல்பினை விளக்கும் தன்மை கொண்ட பாகுபாடுகள் அல்ல. இதனை,

## உள்ளடக்க அடிப்படையிலான பகுப்பு



என்று உள்ளடக்கத் தன்மையினை மையமாகக் கொண்டு ஐந்தாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் அவற்றின் உள்ளடக்கத் தன்மையினைப் பொறுத்து பல இதழ்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இன்று வெளிவரும் இதழ்களின் உள்ளடக்கத் தன்மைகளை மையமாகக் கொண்டு அவை பாகுபடுத்தப்பட்டுள்ளன.

## வார இதழ்கள்

வாரம் ஒருமுறை வரும் இதழை வார இதழ் என்பர். வார இதழ்கள் பொதுவாக அரசியல், பொழுதுபோக்கு, இலக்கியம் போன்ற பன்முகத் தன்மையுடன் வெளிவருகின்றன. வார இதழ்கள் மக்களின் படிக்கும் ஆர்வத்தினை மிகுதிப்படுத்தி அதன் மூலம் வாசகர்களின் சிந்தனைத் திறனை ஊக்குவிப்பதுடன், அவர்களின் கருத்து வெளியீட்டிற்கும் பெரிதும் துணைபுரிகின்றன. வார இதழ்கள் பல்வேறு பன்முகத் தன்மையுடன் வெளிவருகின்ற காரணத்தினால் அதிகம் வாசகர்களை அவைப் பெற்றிருக்கின்றன. அரசியல் இதழ்கள், பல்சுவை இதழ்கள், சினிமா இதழ்கள், துப்பறியும் இதழ்கள், பெண்கள் இதழ்கள் எனப் பல்வேறு தன்மைகளுடன் அவை வெளிவருகின்றன. அவ்வகையில் ‘குமுதம்’, ‘ஆனந்த விகடன்’, ‘கல்கி’, ‘ராணி’, ‘தேவி’, ‘குங்குமம்’ போன்றவை முன்னிலை வகிக்கின்றன.

## வார இதழ்களின் புறக் கட்டமைப்பு

எந்த ஒரு படைப்பினையும் அதன் அமைப்பு நிலையில் ஆய்வு செய்யும் போது அதன் கட்டமைப்புத் தன்மைகளை ஆய்வு செய்வது என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஒரு படைப்பின் கட்டமைப்பு என்பது அதன் புறம் மற்றும் அகம் சார்ந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. வெளியீட்டு முறையும், வெளியீட்டு உத்தியும் அமைப்பு நிலையில் மையச்செயல்பாடாக இயங்கிவருபவை, அவற்றை ஒன்றிலிருந்து ஒன்றினை பிரித்துக்காண இயலாது, ஒன்றின் அமைப்பு வடிவம் மற்றொறு அமைப்பு வடிவத்துடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புடையனவாகும். அதனால்தான் படைப்பாக்க ஆய்வுகளில் அமைப்புநிலை ஆய்வு என்பது முக்கியமான ஒன்றாகச் செயல்படுகிறது.

ஒரு படைப்பினை கட்டமைப்பு ஆய்விற்கு உட்படுத்தும்போது அதனை இருநிலைகளில் ஆய்வு செய்ய வேண்டும். அவை,

1. புறக்கட்டமைப்பு
2. அகக்கட்டமைப்பு

என்பனவாகும். இது இதழியல் கலைக்கும் பொருந்தும். தமிழில் வெளிவரும் 'கல்கி' வார இதழின் புறம் சார்ந்த கட்டமைப்பினை ஆய்வு செய்வதாக இவ்வியல் அமைகின்றது.

கல்கி வார இதழ்களின் புறம் சார்ந்த கட்டமைப்பினை ஆய்வு செய்யும் முன்னர் இதன் சமகாலத்திய இதழ்களான குமுதம், ஆனந்த விகடன், ராணி, தேவி, குங்குமம் போன்ற வார இதழ்களின் தற்காலத்திய சில தொகுப்புகளைக் கொண்டு அவற்றின் புற அமைப்புகளை ஆய்வு செய்வது இன்றியமையததாகும். அப்பொழுதுதான் வார இதழ்களின் பொதுவான புற அமைப்பினை அறிந்து கொள்ள இயலும்.

## தற்கால வார இதழ்களின் புறக்கட்டமைப்பு

வார இதழ்கள் பெரும்பாலும் மக்களின் பொழுதுபோக்கிற்கு துணைசெய்வனவாகும். அதனால் மக்களின் எண்ணங்களைக் கவரும் வண்ணம் அவை வடிவமைக்கப் படவேண்டும். சொல்லப்படும் பொருளை விட அவை சொல்லும் முறையே மக்களை பெரிதும் கவர ஏதுவாக இருக்கின்றன. அவ்வகையில் வார இதழ்களின் புறக்கட்டமைப்பு என்பது அதன் முன் அட்டைப்படம் அல்லது முன்புறம், உட்புறம், பின் அட்டைப்படம் அல்லது பின்புறம் ஆகிய பக்கங்களில் இடம் பெறுகின்ற காட்சிகள், ஓவியக் கலைஞர்களின் கைத்திறனில் வருவனவற்றை நகல் (Block) எடுத்துப் போடும் தன்மை, புகைப்படத்தை நகல் எடுத்துப்போடும் தன்மை (கருப்பு வெள்ளை விளம்பரம்), கணிணியின் மூலம் நகல் எடுத்துப்போடும் முறைகள், அவற்றை வெளிப்படுத்தும் முறைகள் போன்றவைகளாகும்.

பட அமைப்புமுறைகளும் அவற்றிற்கு தலைப்புகள் கொடுத்து வெளியிடும் முறைகளும், அவை மக்களைக் கவர அவர்கள் மேற்கொள்ளும் உத்தி முறைகளும் புற அமைப்பினைச்

சார்ந்தவையாக அமைகின்றன. அவ்வகையில் இன்றைய வார இதழ்களின் புற அமைப்புகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

## குமுதம் இதழின் புற அமைப்பு

குமுதம் இதழின் புறக்கட்டமைப்பானது இலக்கியம், திரைத்துறை, விளம்பரம்,அதன் பொதுத்தன்மைகள் என்ற நிலையில் பிரித்துணர இயலும். குமுதம் இலக்கியத்திற்கென்றே தனிப்பக்கங்களை ஒதுக்கியுள்ளது. சிறுகதைகள் ஐந்தும், தொடர்கதை ஒன்றும், கவிதைகள் ஒன்பதும், ஆன்மீகத் தொடர் ஒன்றும் வெளிவருகின்றன. கட்டுரைகளில் சினிமா தொடர்பான கட்டுரைகள் ஆறும், அரசியல் தொடர்பான கட்டுரைகள் ஒன்று முதல் மூன்று வரையிலும், விளையாட்டுக் கட்டுரைகள் இரண்டு அல்லது மூன்றும், பயணக்கட்டுரைகள் ஒன்றும், கல்வி தொடர்பான கட்டுரைகள் ஒன்று முதல் மூன்று கட்டுரைகள் வரையிலும், தன்னம்பிக்கைக் கட்டுரைகள் இரண்டும், பொதுவான கட்டுரைகள் மூன்றும் வெளிவருகின்றன. திரைத்துறைத் தொடர்பான செய்திகள், பேட்டிகள், கட்டுரைகள், விமர்சனம் பக்கங்கள் என்று இத்துறைசார்ந்த செய்திகளுக்கு அதிகமான பக்கங்களை ஒதுக்கியுள்ளது. திரைத்துறை தொடர்பான செய்திகள் 5 முதல் 7 பக்கங்கள் வரையிலும் இடம்பெறுகின்றன. பக்தித் தொடர் ஒன்றும், நகைச் சுவைத்துணுக்குகள் 16 –உம் பெட்டிச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் சினிமா தொடர்பான பேட்டிகள் 4-உம், அரசியல் தொடர்பான பேட்டிகள் 2-உம், பொதுப் பேட்டிகள் 2-உம் இடம் பெறுகின்றன. குமுதம் விளம்பரங்களுக்கு அதிகப் பக்கங்களை ஒதுக்கியுள்ளது. முழுப்பக்க அளவிலான விளம்பரங்களே அதிகம் இடம்பெறுகின்றன. முழுப்பக்க விளம்பரங்கள் 14-உம், அரைப்பக்க அளவிலான விளம்பரங்கள் 4-உம், கால் பக்க அளவிலான விளம்பரங்கள் அதிகம் இடம்பெறாமலும் வருகின்றன. குமுதத்தில் அதன் அட்டைப் படம் தொடங்கி அதிகப் பக்கங்களில் திரைத்துறையினரின் படங்களே அதிகம் இடம்பெறகின்றது.

## ஆனந்த விகடன் இதழின் புறக்கட்டமைப்பு

குமுதம் இதழின் புறக்கட்டமைப்பு போன்றே ஆனந்த விகடனின் புறக்கட்டமைப்பினையும் இலக்கியம், இலக்கியம் அல்லாத கூறுகள் என்ற நிலையில்

பிரித்துக்காண இயலும். இலக்கியத்தில் சிறுகதையானது ஏழு கதைகளும், தொடர்கதை ஒன்றும், கவிதைகள் இரண்டும் இடம்பெற்றுள்ளன. கட்டுரை அமைப்பில் அரசியல் சார்ந்த கட்டுரைகள் 1 முதல் 3 வரையும், திரைத்துறை தொடர்பான கட்டுரை ஒன்றும், தன்னம்பிக்கை கட்டுரை ஒன்றும், கல்வி தொடர்பானவை மூன்றும், ஆன்மீகம் மற்றும் பயணம் தொடர்பானவை ஒன்றும், பொதுக்கட்டுரைகள் இரண்டும் இடம்பெறுகின்றன. அதுபோன்றே திரைத்துறைத் தொடர்பான எட்டு செய்திகள் வெளிவருவதுடன் பிரபலமானவர்களின் பேட்டிகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் ஆனந்த விகடன் தொடர்களை அதிகம் வெளியிடுகின்றது. அதில் ஆன்மீகம், தன்னம்பிக்கை, மருத்துவம் படக்கதை போன்றவைகளும் , சிரிப்புப் பக்கம் 3 முதல் 6வரையும் இடம்பெற்றுள்ளன. விளம்பரங்களை அதிகம் வெளியிடுகின்றது. முழுப்பக்க அளவிலான விளம்பரங்கள் 13 முதல் 16 பக்கங்கள் வரையிலும், அரைப்பக்க மற்றும் கால் பக்க அளவிலான விளம்பரங்கள் குறைவாக 3 பக்கங்களிலும் வெளிவந்துள்ளன.

## குங்குமம் இதழின் புறக்கட்டமைப்பு

குமுதம், ஆனந்த விகடன் போன்றவைகளின் புறக்கட்டமைப்பு போன்றே குங்குமமும் இலக்கியத்திற்கென்று தனியான அமைப்பினையும், இலக்கியம் அல்லாத படைப்புகளுக்கு தனியான அமைப்பினையும் கொண்டுள்ளன. இவ்விதழில் இலக்கியப் பகுதி குறைவாகவே அமைந்துள்ளது. சிறுகதை மூன்றும், தொடர்கதை ஒன்றும், கவிதைகள் 1 முதல் 3 வரையிலும், திரைத்துறை சார்ந்தவை மூன்றும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் கட்டுரைகள் பெரும்பான்மையும் அரசியல், சினிமா, தன்னம்பிக்கை, கல்வி, மருத்துவம், பொதுக்கட்டுரை போன்றவற்றை சார்ந்து இடம்பெற்றள்ளன. இதில் ஒவ்வொரு கட்டுரைகளும் 1 முதல் 3 வரையிலான கட்டுரை வெளியீடுகள் என்ற தன்மையில் மாறிமாறி அமைந்துள்ளன. இது தவிர பெட்டிச்செய்திகளும், பரிசுப்போட்டிகளும், சமையல், ராசிபலன் போன்றவைகளும் இடம்பெற்றுள்ளன. விளம்பரங்கள் இவ்விதழில் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. ஒரு பக்க விளம்பரங்கள் 5 முதல் 8 வரையிலும், அரைப்பக்க விளம்பரங்கள் 1 முதல் 3 வரையிலும் வெளிவந்துள்ளன.

## ராணி வார இதழின் புறக்கட்டமைப்பு

ராணியில் இலக்கியம் தொடர்பான பகுதிகளில் சிறுகதை நான்கும், தொடர்கதை ஒன்றும், குட்டிக்கவிதைகள் மூன்றும், பெரிய கவிதைகள் (ஒன்றும் சில சமயம் இடபெறாமலும் இதழ் வரும்). கட்டுரைகளில் அரசியல் ஒன்று, பயணக்கட்டுரை ஒன்று, திரைத்துறை ஒன்று, பொதுக்கட்டுரைகள் மூன்றும் வெளிவருகின்றன. அத்துடன் பக்தித் தொடர் ஒன்றும், போட்டி, ராசி பலன் போன்றவையும், நகைச்சுவைத் துணுக்குகள் நான்கும், பேட்டிகள் மூன்றும், பெட்டிச் செய்திகள் 10-உம் இடம்பெற்றுள்ளன. விளம்பரங்கள் மிகக்குறைவாகவே இடம்பெறுகின்றன. முழுப்பக்க அளவிலான விளம்பரங்கள் 6-உம், அரைப்பக்க மற்றும் கால் பக்க விளம்பரங்கள் மூன்றும் வெளிவருகின்றன.

பொதுவாக அனைத்து வார இதழ்களும் மேற்கூறிய புற அமைப்பு நிலைகளை பின்பற்றியே இதழின் புற அமைப்பினை வடிவமைத்துள்ளது. அறிவியல் வளர்ச்சி மற்றும் கால மாற்றம் போன்றவை இதழ்களின் புற அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன. அவ்வகையில் அனைத்து வார இதழ்களும் ஒரே விதமான கட்டமைப்பினை என்றும் பயன்படுத்துதில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## கல்கி வார இதழ்களின் புற அமைப்பு நிலைகள்

தமிழ் வார இதழ்கள் பெரும்பான்மையும் மக்களின் மனங்களைக் கவரும் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியே வெளிவருகின்றன. புற நிலைகளை ஆராயும் போது அவற்றின் பொருண்மைசார்ந்த நிலைப்பாடுகளை தொடர்பு படுத்தியும், அவற்றை விலக்கி நிறுத்தியும் இரண்டு நிலைகளில் ஆராய வேண்டியுள்ளது. பொருண்மை சார்ந்த நிலைப்பாட்டினை ஆராயும் போது பொருண்மை நிலைகளில் படைப்புகள் படைக்கப்பட்ட விதம், அவற்றை வெளிப்படுத்தும் ஆளுமை சார்ந்த புறநிலைப் படைப்புக் கூறுகள் (கேலிப்படம், படஅமைப்பு, தலைப்பு முறை போன்றவை) பயன்படுத்திய நிலை போன்றவை ஆராய வேண்டும். இங்ஙனம் ஆய்வு செய்ய முன்னர் குறிப்பிட்டது போன்று புற அமைப்பு நிலைகளில் இரண்டு தன்மைகளைப் புகுத்தி ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அவை,


1. கற்பனை சார்ந்த படைப்புகளில் புற அமைப்பு

2. கற்பனை சார படைப்புகளில் புற அமைப்பு

என்பனவாகும்.

## கற்பனை சார்ந்த படைப்புகளில் புற அமைப்பு

வார இதழ்களின் பொருண்மை சார்ந்த படைப்புகளில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் கற்பனை என்னும் கூறு இடம் பெற்றிருக்கும். இக்கற்பனை பற்றி தா.ஏ. ஞானமூர்த்தி குறிப்பிடுகையில் "கவிஞன் தன்னுடைய செறிவான உணர்ச்சியினைக் கலை வடிவத்தோடு வெளிப்படுத்துவதற்கு உரிய உத்திகளில் கற்பனையும் ஒன்று" (தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத்திறனாய்வியல், ப.171) என்கிறார். அதாவது படைப்பாளனின் உணர்ச்சி கலைவடிவமாக அமைய கற்பனையுடன் இருக்க வேண்டும் என்கிறார். வார இதழான கல்கி இதழில் கற்பனைசார் புற அமைப்பை இரு நிலைகளில் வகைப்படுத்தலாம். இதனைக் கீழக்காணும் வரைபடம் மூலம் விளக்க இயலும்.



என கற்பனை சார்ந்த படைப்புகளின் புற அமைப்புகளை வகைப்படுத்தி ஆராயும் போது அவற்றின் புற அமைப்பு வடிவம் அக அமைப்பிலும், அக அகைப்பு வடிவம் புற அமைப்பிலும் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

## கற்பனை சார் இலக்கியங்களின் புற அமைப்பு

இலக்கியங்கள் மனித வாழ்க்கை எடுத்தியம்பும் அரிய படைப்புகளாகும். எனினும் அவை பல்வேறு வடிவங்களில் பல்வேறு தன்மைகளை வெளிப்படுத்தும் நோக்கத்துடனே வெளியாகின்றன. மனித வாழ்க்கையினை உள்ளது உள்ளபடியே எந்தவகை இலக்கியங்களும் எடுத்தியம்புவதில்லை. எல்லா இலக்கியங்களிலும் கற்பனை ஒரு முக்கிய கூறாக அமைந்துள்ளது.

எதார்த்த வகை இலக்கியங்களிலும் இந்தக் கற்பனையின் செயல்பாடானது ஒரு குறிப்பிட்ட அளவிலேனும் கலந்தே காணப்படுகிறது. இங்ஙனம் கற்பனைகளை அடிநாதமாகக் கொண்டு இயங்கும் இலக்கியங்களை அவற்றின் படைப்பு நிலைகளைக் கொண்டு ஆராயும் போது வேறுவிதமாகவும், அவையே வார இதழ்களில் வெளியாகும் போது (புற அமைப்பில்) வேறு விதமாகவும் தோற்றம் பெறுகின்றன. சான்றாகக் கூற வேண்டுமானால் அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' என்னும் சரித்திர நாவல் வாரப்பத்ரிதிகைகளில் வெளியிடப்பட்டு வந்தபோது ஒவ்வொரு அத்தியாத்திற்கும் ஓவியப் பட அமைப்பு முறைகளை பயன்படுத்தினர். இது வாசகனை கண்டவுடன் படிக்கத் தூண்டும் ஆவலை அதிகப்படுத்தும் ஒரு உத்தியாகவே அன்றைய வாரப்பத்திரிகைகள் பயன்படுத்தின. ஆனால் அவையே ஐந்து பாகங்களைக் கொண்ட நாவலாக வெளியிடப்பட்ட போது இத்தகைய பட அமைப்பு முறைகள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டன.

கற்பனை சார்ந்த இலக்கியங்களின் புற அமைப்பை ஆராயும் போது கற்பனை என்னும் அளவுகோலை பல நிலைகளில் இலக்கியப் படைப்புகளில் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வகையில் கற்பனை சார் இலக்கியங்களின் புற அமைப்பினை,

1. இலக்கியங்களின் புற அமைப்பு

2. கற்பனைசாராத இலக்கியங்களில் அவைசார் கற்பனை அமைப்பு

என வகைப்படுத்த இயலும்.

## 1. இலக்கியங்களின் புற அமைப்பு

ஒரு மொழியின் கற்பனை சார்ந்த படைப்புகள் என்பவை பெரும்பாலும் இலக்கியமேயாகும். கற்பனை சார் இலக்கியங்கள் என்பவை குறுநாவல், சிறுகதை, கவிதை போன்றவைகளாகும். இதில் நாவல் என்பது தொடர்கதை என்னும் அமைப்பிலேயே கல்கி வார இதழ்களில் இடம் பெறுகின்றன.

### அ) நாவல்

இலக்கிய வகைகளில் பெரியதும், மக்களின் மனதில் நிலைத்து நிற்பதுமான இலக்கியமைப்பில் முதன்மையானதாகக் கருதப்படுவது நாவல் இலக்கியமாகும். நாவல் இலக்கிய வகையினை ஒரே பகுதியாக வார இதழ்களில் வெளியிட இயலாது. அதனை தொடர்கதை என்ற அமைப்பிலேயே அனைத்து வார இதழ்களும் வெளியிடுகின்றன. நாவல் வெளியீட்டில் சிறந்து விளங்கும் வார இதழானது மக்களின் வரவேற்பினை பெறுவதில் சிறந்து விளங்கும். இத்தகைய சிறப்பு வாய்ந்த நாவலிலக்கிய வெளியீட்டில் கல்கி இதழ் சிறந்த இதழாகக் கருதப்படுகிறது. கல்கியில் வெளியாகும் தொடர்நாவலின் சிறப்பினைக் கருதியே அவ்விதழை வாங்குவோரும் உள்ளனர்.

கல்கி நாவல் வெளியீடுகளை ஆராயும் போது அவை இரண்டு வகையான தன்மைகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது.

1. சரித்திர நாவல் வெளியீடு
2. சமூக நாவல் வெளியீடு

என்ற தன்மையில் அவை வெளியாகின்றன.

### சரித்திர நாவல் வெளியீட்டின் புற அமைப்பு

சரித்திர நாவல்களை கல்கிவார இதழ் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. எனினும் அனைத்து கல்கி இதழ்களிலும் இத்தொடர்கள் இடம் பெற்றுள்ளது என்று கூறவியலாது. சில இதழ்களில் இத்தொடர்கள் இடம்பெறாமலும் வந்துள்ளன. மற்ற வார இதழ்களானது சரித்திர நாவல்களை முன்னர் வெளியிட்டு வந்தது. ஆனால் தற்கால கட்டத்தில் சரித்திர நாவல்களை வார இதழ்கள் வெளியிடுவதில்லை. சரித்திர நாவல்களுக்கான வரவேற்பானது முந்தைய காலகட்டம் போன்று சிறந்த வரவேற்பினைப் பெறுவதில்லை.

கல்கி சரித்திர நாவல்களை வெளியிடும் போதும் சில வரையரைகளைப் பயன்படுத்துகின்றது. 2004- இல் வெளியான சரித்திர நாவல்கள் அமரர் கல்கி படைத்த நாவல்களும், விஷ்வக்ஸேனனின் நாவல்களும் வெளியாகியுள்ளன. இத்தகைய சரித்திர நாவல்களின் புறக் கட்டமைப்பானது பக்க அமைப்பினையும், வெளிப்பாட்டு முறையினையும் அடியொற்றியதாகும்.

சரித்திர நாவல்களில் அமரர் கல்கியின் படைப்புக்களை வெளியிடும் போது அவரின் நாவலுக்கு சிறப்புத்தன்மை அளிப்பது போன்று பக்க வரையறைகள் காணப்படுகின்றன. அமரர் கல்கியின் சரித்திர படைப்புகள் வெளியாகும் இதழ்களில் பெரும்பாலும் இதழ்களின் முதல் பகுதியிலோ, இறுதிப்பதியிலோ இடம் பெறமால் இதழின் மையப்பகுதி சார்ந்தே அவை வெளியிடப்பட்டுள்ளன. மேலும் பத்து பக்கங்கள் அவரின் நாவலுக்கு ஒதுக்கப்படுகின்றன.

அமரர் கல்கியின் சிவகாமியின் சபதம் நாவலை வெளியிடும் போது நாவல் தொடங்கும் முதற்பக்கத்தில் முதற்பகுதி நாவல் தொடர்பான ஓவியம் இடம் பெற்றிருக்கும். அவ்வோவியத்தின் ஊடே நாவலின் பெயர் இடம் பெறுவதுடன் அதனை அடுத்த நிலையில் அது எந்த அத்தியாயம் என்பதும், அவ்வத்தியாத்தின் பெயரும் இடம் பெற்றிருக்கும். அதன் கீழ்ப்பகுதியிலோ, அல்லது மேல் பகுதியிலோ 'அமரர் கல்கி' என்று பெரிய எழுத்துக்களில் (18-1-2004, ப.41)எழுதப்பட்டிருக்கும். மேலும் ஒவ்வொரு பக்கத்திலும் ஓவியம் இடம்பெற்றிருக்கும் (மேலது). அவை பக்கத்தின் பாதியளவிலோ அல்லது ஒரு பக்கம் முழுமையாகவோ

இடம்பெற்றிருப்பதுடன். சில இடங்களில் இரு பக்க அளவிலும் (மேலது, பக்.48-49) ஓவியம் இடம் பெற்றுள்ளது.

கல்கியில், அமரா் கல்கியின் சரித்திர நாவல்களுக்கு ஓவியவரைவானது அவை வெளியிடும் அத்தியாயத்தில் கூறப்படும் செய்திகளுடன் தொடா்புடையதாகவே அமைந்துள்ளது. மேலும் அவரின் சரித்திர நாவல்களை வெளியிடும் போது இறுதிப்பக்கம் தவிா்த்து மற்ற பக்கங்களில் வேறு செய்திகள் இடம் பெறுவதில்லை (மேலது, பக். 41-51).

அமரா் கல்கியின் சரித்திர நாவல் அல்லாத சரித்திர நாவல்கள் கல்கி இதழில் ஐந்து பக்கங்களும், சில சமயம் அதற்கு குறைவாகவும் (26-12-2004, பக்.92-96)இடம்பெற்றுள்ளன. மேலும் அந்நாவல்களில் முதற்பகுதியில் அரைப்பக்கத்துக்கான ஓவியமும், அதனை அடுத்த பகுதிகளில் அந்நாவலின் பெயா் பெரிய எழுத்திலும் எழுதியோரின் பெயா் மற்றும் அதன் அத்தியாயம் போன்றவை முதற்பக்கத்தின் பக்கப் பகுதிகள் அல்லது மேற்புறத்தில் அதைவிடச் சற்று சிறிய எழுத்தில் இடம் பெற்றிருக்கின்றது. அத்துடன் நாவலின் இடையிடையே (மேற்புறம்,கீழ்புறம்) வேறு செய்திகளும் (மேலது, பக்.94,95,96) இடம் பெற்றுள்ளன.

## சமூக நாவல் வெளியீட்டின் புற அமைப்பு

சமூக நாவல்கள் என்பதில் குடும்ப நாவல்களும் இடம்பெறும். இத்தகைய நாவல் தொடா்கதைகள் கல்கியின் அனைத்து இதழ்களிலும் காணப்படுகின்றன. நாவல் எனும் போது குறுநாவல்களாகவே வார இதழ்களில் இடம்பெறுகின்றன. இத்தகைய நாவல்கள் கல்கியில் இடம்பெறும் போது அவை குறைந்த அளவில் பக்க வரையறைகளை உடையதாகவும், அதிக அளவில் படங்கள் இடம் பெறாததாகவும் வெளிவருகின்றன.

கல்கியில் சமூக நாவல்கள் (பிற நாவல்களும்) குறைந்த அளவு ஐந்து பக்கங்களுக்கு மேல் இடம்பெறுவதில்லை. இதன் முதல் பக்கத்தில் மட்டுமே பாதியளவில் படங்கள் இடம் பெறுகின்றன. மேலும் படங்கள் கதைப்பகுதியுடன் தொடா்புடையதாகவும், அப்படங்கள் நடுவில் அமையும் போது அதன் இரண்டு பக்கங்களிலும் கதைப்பகுதி இடம்பெறுவதாகவும் (29-8-2004,

பக். 28-29) கல்கியில் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய நாவலின் பெயரினை பெரிய எழுத்திலும் ஆசிரியரின் பெயரினை சிறிய அளவிலும் அச்சிடுகின்றது. மேலும் இந்நாவல்களில் முதற்பக்கம் தவிர்த்த மற்ற பக்கங்களில் இடையிடையே வேறு செய்திகளும் (28-3-2004, பக்.46-47) கூறப்பட்டுள்ளன.

## ஆ. சிறுகதை

காலந்தோறும் இலக்கிய வகையானது மாறிக்கொண்டே இருக்கின்ற தன்மையினை உடையது. ஒவ்வொரு காலகட்டத்திலும் கதை இலக்கிய வகைமைகளிலும் இத்தகைய தொரு மாற்றத்தினைக் காணமுடியும். அதற்கு சிறுகதையும் விதிவிலக்கல்ல. சிறுகதை அது தோன்றிய காலகட்டத்தில் செறிவு மிகுந்தாகவும், இலக்கியத் தரத்தினை உடையதாகவும் விளங்கியது. காலப் போக்கில் அதன் தன்மைகள் மாற்றத்தினை அடைந்ததுடன், அவற்றின் வெளிப்பாட்டு முறையிலும் புதிய தன்மைகளை புகுத்தலாயிற்று. இப்புதிய தன்மைகளை இதழ்களும் உட்கொண்டதுடன் அவற்றிற்கு ஆதரவினையும் நல்கியுள்ளது. அவ்வகையில் முன்னோடி இதழாக விளங்குவது கல்கி இதழாகும்.

சிறுகதையின் வடிவம் சார்ந்த மாற்றங்களை கல்கி தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும். சிறுகதையின் வளர்ச்சி நிலையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சிறுகதை வடிவம் ஒரு பக்க சிறுகதைகள் ஆகும். கல்கி ஒரு பக்கச் சிறுகதைகளை வெளியிட்டு இலக்கிய வளர்ச்சி நிலையில் தன்னையும் ஒன்றிணைத்துச் சென்றுள்ளது. எனினும் கல்கியில் வெளியான ஒரு பக்கக் கதைகள் அனைத்தும் நகைச்சுவைத் தன்மை கொண்டனவாய் அமைந்திருந்தது.

கல்கி ஒரு பக்கக் கதையினை 'நிமிஷக் கதை' என்ற பெயரில் வெளியிட்டு வந்தது. சான்றாக ஸோமாஸ் படைத்த 'வந்த ஆசாமி' (10-12-1943, ப. 41) என்ற கதையினைக் கூறலாம். 2004-இல் கல்கியில் வெளியான சிறுகதைகளில் இத்தகைய வடிவம் அடிப்படையிலான புதுமைகள் எதுவும் இல்லை. எனினும் சிறுகதை இலக்கியத்திற்கு முதன்மை அளித்து ஒவ்வொரு இதழிலும் 2 முதல் 4 சிறுகதைகளுக்கு இடம் கொடுத்துள்ளது.

கல்கியில் வெளியாகும் சிறுகதைகள் 2 முதல் நான்கு பக்கங்களை உள்ளடக்கியதாகவும், கதை வெளியாகும் முதற்பக்கத்தில் கதை தொடர்பான வரைபடங்கள் முதல், இடை, கீழ் (15-2-2004, பக். 24-25) என ஏதாவது ஒரு இடத்தில் இடம்பெறுவதுண்டு. இத்தகைய படங்கள் கால் மற்றும் அரைப்பக்க அளவில் (28-3-2004, பக். 52-53) இடம்பெறுகின்றது. கதை தொடங்கும் பக்கத்தினை அடுத்த பக்கங்களில் வேறு செய்திகளும் (மேலது, பக்.54-55) இடம்பெறுகின்றன.

## இ. கவிதை

தமிழ் இலக்கிய உலகில் தோன்றிய முதல் வடிவம் கவிதை இலக்கிய வடிவமாகும். இத்தகைய சிறப்பினைப் பெற்ற கவிதை இலக்கிய மரபினை கல்கி தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. கல்கியில் வெளியாகும் கவிதைகளை இரு நிலைகளில் ஆராய இயலும். அதனை,

1. தனிக்கவிதைகள்
2. தொகுப்புக் கவிதைகள்

எனப் பாகுபடுத்த இயலும்.

## தனிக்கவிதைகள்

கல்கியில் கவிதை வெளியிடுதல் என்பது இலக்கியத்தரத்தில் உயர்ந்த கவிதைகளை வெளியிடுதல் என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளது. கவிதை என்பது ஒரு சிறிய கூறின் மூலம் இலக்கியத் தரத்தில் சொல்ல வந்த கருத்தை வெளியிடுதலாகும். இத்தன்மை கொண்ட கவிதைகளை கல்கி தனிக்கவிதைகளாக வெளியிட்டுள்ளது.

தனிக்கவிதைகள் என்பவை இதழ்களில் கவிஞர்களின் தனிப்பட்ட கவிதைகளை வெளியிடுதல் என்னும் தன்மையில் அமைந்து வருகின்றது (அவை தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் ஆயினும்). இதில் தொடர்ச்சியான அமைப்புகள் இல்லை. இங்ஙனம்

வெளிவரும் கவிதைகள் பல ஆசிரியர்களுடைய சிறுசிறு கவிதைகளாக ஒன்று அல்லது இரண்டு பக்கத்தில் அமையும். இக்கவிதைகளில் சிறந்த கவிதைகளின் கருவினை மையமிட்டு வரைபடம் அமைந்திருக்கும். இப்படங்கள் அப்பக்கத்தின் ஓரப்பகுதிகளிலோ அல்லது மற்றபகுதிகளிலோ சிறிய மற்றும் பெரிய அளவில் அமைந்திருக்கின்றது.

தனிக்கவிதைகள் சில குறிப்பிட்ட காலகட்ட நிகழ்வினை முன்வைப்பது போன்று வெளிவரும் போது அதற்கான கேலிச்சித்திரமும் வெளியிடப்படுகின்றது. சான்றாக தேர்தலை ஒட்டி வெளியான இதழில் தேர்தலை விமர்சிக்கும் நோக்கில் அமைந்துள்ள வித்யனின் 'தேர்தல் வைரஸ்' (9-05-2004, ப.39) கே.பி. பத்மநாபனின் 'தேர்தல் தேரோட்டம்' (28-03-2004, ப.58) போன்ற கவிதைகளைக் கல்கி இதழ் வெளியிட்டு இதற்கான கேலிச்சித்திரத்தையும் வெளியிட்டுள்ளது.

தனிக்கவிதைகள் வெவ்வேறு பொருளை பேசுவனவாக அமைவதுடன், தனிப்பட்ட அமைப்பு நிலைகளையும் அவை கொண்டுள்ளன. குறிப்பிட்ட கவிஞர்களின் கவிதைகள் மட்டும் இடம்பெறுவதில்லை. பல கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெறுகின்றன. மேலும் இத்தகைய கவிதைகள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான வரைபடங்கள் (12-12-2004, பக்.56-57) வெளியிடப்படுவதுடன். அக்கவிதைகளின் ஆசிரியரின் பெயரையும் கல்கி வெளியிடுகின்றது. சில சமயங்களில் தனிப்பட்ட படங்கள் வெளியிடப்படாமல் அனைத்து கவிதைகளுக்கும் ஒன்றாக இணைத்து ஒரே ஒரு வரைபடம் மட்டும் (6-6-2004, ப.33) இடம்பெறுவதும் உண்டு. ஒரு இதழில் இரண்டு பக்கத்துக்கு அதிகமான பக்கங்களை கல்கி இத்தகைய கவிதைகளுக்கு ஒதுக்கவில்லை எனலாம்.

## தொகுப்புக் கவிதைகள்

தொகுப்புக் கவிதைகள் என்பவை குறிப்பிட்ட கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்ட கவிதைகளை தொடர்ந்து வெளியிடுவது ஆகும். தொடர் நாவல்கள் போன்று இவை தொடர் கவிதைகளாகும்.

2004 - இல் வெளியான கல்கி வார இதழில் பா. விஜய்யின் 'கண்ணாடிக் கல்வெட்டுகள்' என்னும் கவிதைத்தொகுப்பின் அனைத்து கவிதைகளையும் கல்கி தொடர்கவிதைகளாக வெளியிட்டுள்ளது. மேலும் இதன் புற அமைப்பினை நோக்கும் போது இத்தகைய கவிதை வளர்ச்சிக்கு கல்கி ஊக்கம் அளித்துள்ளது என்றே கூறவேண்டும். இத்தொடர் கவிதைகளானது பெரிய அளவில் வரைபடங்களில் பின்புலத்தைக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது. நான்கு பக்கங்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ள இத்தகைய கவிதைகளில் முதல் பக்கத்தில் பெரிய வரைபடமும், அதனை அடுத்த பக்கங்களில் சிறிய அளவில் வரைபடத்தினைப் பயன்படுத்தியும், சில சமயம் பின்புல வரைபடத்தினூடே (29-8-2004, பக். 68-69) கவிதைகளை வெளியிடுவதும் உண்டு. இத்தகைய வரைபடங்கள் கவிதையின் பொருண்மையுடன் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. மேலும் இத்தொடர் கவிதைகள் அனைத்து இதழிலும் வெளியிடப்படவில்லை. தொடர் கவிதைகளில் கவிதைப் பகுதி குறுகியதாகவும் வரைபடம் பெரிதாகவும் அமைகின்றது.

## நகைச்சுவைத் துணுக்குகள்

கல்கியில் நகைச்சுவைத் துணுக்குகள் வாசகர்களின் தொடர் வாசிப்பினால் ஏற்படும் மன இறுக்கத்தைக் குறைக்கும் பகுதியாக அமைந்துள்ளது. மற்ற வார இதழ்களில் காணப்படுவது போன்று இருபொருள்படும் தன்மையில் நகைச்சுவைத் துணுக்குகள் கல்கியில் இடம்பெறுவதில்லை. இப்பகுதியில் நகைச்சுவைத் துணுக்குகளுக்கு பொருத்தமுறும் வகையில் படங்கள் வரையப்பட்டுள்ளன. ஒவ்வொரு இதழிலும் குறைந்தது 14 துணுக்குகள் இடம்பெறுகின்றன. இவ்வெண்ணிக்கை சில கல்கி இதழிகளில் மாறுபடுகின்றது.

## கற்பனை சாரா இலக்கியங்களின் கற்பனை சார் புற அமைப்பு

## 1.கட்டுரைகள்

படைப்பு இலக்கியங்களில் கற்பனை என்பதை பயன்படுத்தாத இலக்கிய வகை என்று கூறும்போது கட்டுரை இலக்கியத்தினையே கூற இயலும். இத்தகைய இலக்கிய வகைமையின்

புற அமைப்பினையும் ஆய்வுக்கு உட்படுத்தும் போதுதான் கல்கி இதழின் முழுக் கட்டமைப்பினையும் அறிந்து கொள்ள இயலும்.

கட்டுரை இலக்கியத்தில் பல்வேறு துறைகளின் கட்டுரைகளும் உள்ளடங்கும். கல்கியில் வெளியாகும் கட்டுரைகளில் பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள் வெளிவருகின்றன. கல்கியில் வெளியாகும் இலக்கிய வகைமைகளில் அதிகம் இடம்பெறுவது கட்டுரை இலக்கியங்களாகும். ஒரு இதழின் தரத்தினை கணக்கிட உதவுவதும் கட்டுரைகளின் வெளிப்பாடுகளேயாகும். சிறந்த கட்டுரைகளை வெளியிடும் இதழின் தரமானது மற்ற இதழின் தரத்தினைவிட சிறந்தது எனக் கொள்வர்.

கல்கியில் வெளியாகும் கட்டுரைகள் கலை,அரசியல், சமூகம், வணிகம், அறிவியல், திரைத்துறை, மருத்துவம், விளையாட்டு, விவசாயம், பக்தி என்று பன்முகத் தன்மையினைக் கொண்டதாய் வெளிவருகின்றது. இக்கட்டுரைகளின் புற அமைப்பினை ஆராயும் போதுதான் கல்கியின் புற அமைப்பினை அறிந்துகொள்ள இயலும்.

## கலைத்துறை

கல்கி பாரம்பரிய இசை தொடர்பான செய்திகளுக்கு அதிக கவனம் செலுத்தியுள்ளது. 2004 - இல் வெளிவந்த கல்கி இதழ்களில் பெரும்பாலும் இசை தொடர்பான செய்திகளை வெளியிட்டுள்ளதுடன் அதற்கு கூடுதல் பக்கங்களையும் ஒதுக்கியுள்ளது. இசைத்துறைச் செய்திகளுக்கு ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒரு படம் என்னும் அளவினை அமைத்துள்ளது. முதல் பக்கம் சற்று பெரிதான புகைப்படமும், இசை தொடர்பான மினித் தொடர்களில் கோபுலுவின் படங்கள் பெரிய அளவிலும் இடம்பெறுகின்றன. இசை மட்டும் அல்லாமல் மற்ற கலைதொடர்பான செய்திகளுக்கும் கல்கியில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பான வண்ணப்படங்கள் வெளியிடும் போதும் பெரிய படங்களையே வெளியிட்டுள்ளது.

சான்றாக 'த்ரி இன் ஒன்!' (9-05-2004, ப.4) என்னும் தலைப்பில் ஓவியம் குறித்தான வெளியீட்டில் நான்கில் மூன்று பாகம் வண்ணப் படம் மற்றும் ஓவியர்களின் படமும் ஒருபாகம் செய்தியும் இடம்பெற்றுள்ளது.

## திரைத்துறை

கல்கி இதழ் திரைத்துறைத் தொடர்பான செய்திகளுக்கு கூடுதலான அளவு பக்கங்களை ஒதுக்கவில்லை. திரைத்துறை தொடர்பான செய்திகளிலும் தமிழ் பண்பாட்டை ஒட்டியுள்ள தன்மைகளுக்கு மட்டுமே ஆதரவு தந்துள்ளது. அதனால் திரைத்துறை தொடர்பான படங்கள் என்பது கல்கியில் பண்பாட்டினை ஒட்டிய நிலையிலேயே அமைந்துள்ளது எனலாம். திரைத்துறையைச் சார்ந்த நடிகர்கள், இயக்குநர்கள் பேட்டிகளில், அவர்கள் தொடர்பான புதிர்பக்கங்கள் இணைக்கும் போதும், அந்த நாள் ஞாபகம் போன்ற ஒரு சில பகுதிகளில் முழுமையான திரைத்துறை நடிகர்களின் படங்களை இடம் பெறச் செய்துள்ளனர். ஆனால் அவை அனைத்துப் படங்களிலும் ஆபாசம் என்பது இல்லாத வண்ணம் அமைத்துள்ளனர். மேலும் திரைத்துறை சார்ந்தோரின் பேட்டிகளின் அல்லது கட்டுரைகளின் இடையே அவர்களின் படங்கள் இல்லாத பக்கங்களில் நகைச்சுவைத் துணுக்குகளை இடம் பெறச் செய்துவிடுவதை கல்கியில் பெரும்பாலும் ஒரு உத்தியாகவே கையாண்டுள்ளனர்.

## அறிவியல் துறை

அறிவியல் துறைதொடர்பான செய்திகள் என்பது கல்கியில் பெரும்பான்மையும் புதிய கண்டுபிடிப்புக்களின் செய்திகளை வெளியிடுவதாகவே வெளிவந்துள்ளது. கல்கி இதழில் அறிவியல் செய்திகளை வெளியிடும் போது கற்பனைகளை இணைத்து வெளியிடுதல் என்பது பொருந்தாது. அறிவியல் செய்திவெளியீட்டின் போது அது தொடர்பான படங்கள் வெளியிடப்படுகின்றது. மேலும் கண்டுபிடித்தவரின் படத்தினையும் வண்ணப்படத்துடன் வெளியிடுகின்றது. இதைப்போன்றே மருத்துவம், விளையாட்டு, விவசாயம் போன்ற துறைகளின் வெளிப்பாடுகளும் அமையும். (4-7-2004, பக்.2-3, 19-12-2004, ப.31, மேலது, பக்.20-21)

## அரசியல் கட்டுரைகள்

கட்டுரை வெளியீட்டில் அரசியல் தொடர்பான கட்டுரைகளே கல்கியில் அதிகம் இடம்பெற்றுள்ளன. நடப்பு அரசியல் நிலையை விமர்சிக்கும் நோக்கிலும், அதனை மக்களுக்கு உணர்த்தும் நோக்கிலும் இத்தகைய கட்டுரைகள் அமைந்துள்ளன. அரசியல் தொடர்பான கட்டுரைகளில் ஆளும் அமைப்பு குறித்தான விமர்சனங்களாகவே பெரும்பான்மையான கட்டுரைகள் அமைந்துள்ளன. மேலும் 2004 - ஆம் ஆண்டு காலகட்ட அரசியலை அன்றைய அரசியல் தலைவர்களும், மற்றோரும் எங்ஙனம் எதிர்கொள்கின்றனர் என்ற தன்மையிலும், அவ்வரசியல் நிலை தொடர்பான கருத்து வெளிப்பாடுகளுமாக அரசியல் சார்ந்த கட்டுரைகள் கல்கியில் அமைவு பெற்றுள்ளன.

அரசியல் கட்டுரைகள் பெரும்பாலும் 2 முதல் 3 பக்க அளவில் அமைந்திருப்பதுடன் அவை எந்தக் கட்சிசார் அரசியலைப் பேசுகின்றதோ அக்கட்சி சார்ந்தோரின் படங்களை கால் பக்க அளவிலும், அரைப்பக்க அளவிலும், முழுப்பக்க அளவிலும், சிலசமயம் கட்டப் படத்திலுமாக வண்ணப்படங்களாக இடம்பெற்றிருக்கும். இப்படங்களின் அமைவானது அப்பக்கத்தின் ஏதாவது ஒரு பகுதியல் அமையும். அதற்கான தனியான அமைப்பு ஏதும் இல்லை.

## கற்பனை சாரா படைப்புகளின் புற அமைப்பு

வார இதழ்கள் பல்வேறு சமூகத்தினர், பல்வேறு வயதினர், பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் எனப் பல நிலைகளில் உள்ளோர் வாசிக்கும் பன்முகத்தன்மை கொண்ட இதழ்களாகும். எனவே அனைவருக்காகவும் தங்கள் இதழை படைத்துள்ளோம் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டவேண்டும். வாசகர்களின் எண்ணப் போக்கினை, அவர்கள் மனம் மகிழ்வடையும் வண்ணம் வெளியிட வேண்டுவது முக்கியமாகும்.

இதழைக் கண்டதும் படிக்கத்தூண்டும் வண்ணம் அதன் புற அமைப்பு செயல்பட்டால் தான் அது மக்களை கவரும். அவ்வகையில் கல்கி வார இதழின் புற அமைப்பினை ஆய்வது இன்றியமையாததாகும். புறஅமைப்பு என்பது இதழின் நோக்கத்துடன் தொடர்புடையதாகும்.

இதழ்களின் வெளிப்புற மற்றும் உட்புற அமைப்பினைக் கொண்டே அது எவ்வகையான பத்திரிகை என்று உணர்ந்து கொள்ள இயலும். அவ்வகையில் கல்கி வார இதழ் சமுதாயம் சார்நிலைகளை அடிநிலையாகக் கொண்டது என்பதை அதன் புற அமைப்பின் மூலம் உணர்ந்து கொள்ள இயலும்.

வார இதழ்களின் கற்பனை சாரா படைப்புக்களின் புற அமைப்பானது பொது நிலையில் ஒன்றிணைந்தும் சில தனிப்பட்ட நிலைகளில் வேறுபட்டும் காணப்படுகின்றன.

1. பொது நிலை - அட்டைப்படம், அளவு, அச்சு, தலையங்கம், விளம்பரம், படைப்புக்குத் துணை சேர்க்கும் படங்கள்.
2. தனிநிலை - கல்கி குழுமம் குறித்த செய்திகள், கல்கி குழுமத்தின் தனிப்பகுதிகள், திறனாய்வு மதிப்பீடுகள், துணுக்குச் செய்திகள் போன்ற அமைப்புகள் இதில் அடங்கும்.

## 1. பொது நிலை

பொதுநிலை என்பது அனைத்து வார இதழ்களுக்குமான பொது அமைப்பினைக் குறிப்பதாகும். அவ்வகையில் கல்கி இதழில் காணப்படும் பொது அமைப்பினையும் ஆய்வு செய்ய இயலும். கல்கியின் அட்டைப்படம், அளவு, அச்சு, தலையங்கம், விளம்பரம், படைப்புக்குத் துணை சேர்க்கும் படங்கள் எனப்பாகுபடுத்தலாம்.

## கல்கியின் அட்டைப்படம்

ஒரு இதழின் தலையாய பகுதிகளில் ஒன்றாக விளங்குவது அட்டைப்படமாகும். இதழ்களின் புற வடிவத்தைச் சார்ந்த பகுதியாக இது விளங்குகிறது. வாசகர்களுக்கு கல்கி வார இதழை படிக்கத் தூண்டுவது அதன் அட்டைப்படமாகும்.

"பல்வேறு உட்பகுதிகளைக் கொண்ட மனிதன் சட்டையணிந்து அழகாகக் காட்சியளிப்பது போல இதழ்களின் அட்டைப் படங்களே பத்திரிக்கையை வாங்கத் தூண்டுவதும்

உண்டு" (நா.வேலம்மாள், த.இ.க.கூ., ப.78) என்னும் சசிரேகவின் கூற்று இதழ்களுக்கு அட்டைப் படத்தின் இன்றியமையாமையை விளக்குகின்றது. மேலும் இவ்வட்டைப்படமானது இதழ்களின் தரத்தை நிர்ணயிக்கும் இதழியல் கூறுகளில் ஒன்றாக விளங்குகின்றது.


ஒரு வீட்டை அழகுறச் செய்வதும், மதிப்புறச் செய்வதும், வீட்டின் உள்ளே இருப்போரின் உணர்வை உணர்த்தச் செய்வதும் வீட்டின் முன்றில் எனப்படும் வாயில்களேயாகும். வாயிலின் அழகே மனதை உள்ளே செல்லத்தூண்டுவது. ஒரு வீட்டிற்கு வாயில் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவு முக்கியமானது இதழ்களுக்கு அட்டைப்படமாகும்.

அட்டைப்படமே இதழ்களின் வாயிலாக இருப்பதால் அதனை வண்ணமுற அமைப்பதுடன், வாசகனைச் சுண்டியிழுக்கவும், அவனை வாங்கவும் மற்றும் படிக்கத் தூண்டவும் செய்யவேண்டும். எந்த ஓர் இதழும் வாசகர்கள் மத்தியில் உடனடியாகவும், நிலையாகவும் இடம் பெற வேண்டுமெனில் அதன் அடடைப்படம் தெளிந்த கருத்துக் கண்ணாடிகளை விளக்குவது போன்று அமைய வேண்டும். உள்ளடக்கப் பொருளையும், பத்திரிகையின் தலையாய நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாக அமையும் அட்டைப்படமே வாசகன் மத்தியில் நிலைத்த வரவேற்பினைப் பெறும். அங்ஙனம் அட்டைப்படத்தை வெளியிடும் இதழே மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெறும். இத்தகைய கூறுகளைச் சிறப்புறப் பெற்று கல்கி இதழ் திகழ்கின்றது.

கல்கி இதழில் வெளிவரும் அட்டைப்படத்தை இரு நிலைகளில பிரித்து விளக்க இயலும். அவற்றை,

1. முன்னட்டைப் பகுதி
2. பின்னட்டைப் பகுதி

எனப் பிரிக்கலாம்.




## முன்னட்டைப்பகுதி

2004 - ஆம் ஆண்டு வெளிவந்த கல்கி வார இதழின் முன் அட்டைப்படங்களை நோக்கும் போது அதனை முன்னட்டையின் முதல்பக்கம், இரண்டாம் பக்கம் என்று பிரிக்க இயலும். முன் அட்டையின் முதல்பக்கமானது வாசகர்கள் கண்ணில் படக்கூடிய முதல் அட்டைப்பக்கமாக இதழின் வாயிற் பகுதியாக அமைந்துள்ளது. கல்கியின் எல்லா இதழ்களிலும் முகப்பில் அந்த இதழின் பெயரினை சற்று பெரிய அளவில் தமிழிலும், ஆங்கிலத்தில் சற்று சிறிய அளவிலும் பதித்துள்ளனர். ஆங்கிலத்தில் பெயர் எழுதியுள்ள பகுதியை அடுத்து இதழ் வெளியான தேதியும், விலையும் அச்சிடப்பட்டுள்ளன. விலையைக் குறிப்பிடும் விதத்தில் மற்ற சமகால இதழ்களான ஆனந்தவிகடன், குமுதம் போன்ற இதழ்கள் தமிழகத்திற்கான விலையையும், பிற மாநிலங்களுக்கான விலையையும் தனித்தனியாக அச்சிட்டுள்ளன, கல்கி இதழில் இவ்வமைப்பினை காண இயலவில்லை.

அட்டையின் முகப்பான முதற்பகுதியில் விளையாட்டு வீரர்கள், ஆன்மீகவாதிகள், கடவுளர் படங்கள், இசைக்கலைஞர்கள் போன்றோரின் வண்ணப் படங்கள் இடம் பெறுகின்றன. அட்டைப்பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட வண்ணப் படங்கள் இடம் பெறுவதும் உண்டு. அவை அனைத்தும் செய்தியின் தன்மைகளைப் பொறுத்தே அமைந்துள்ளன. அட்டைப்படங்களில்

இடம் பெறுவோர் தொடர்பான செய்திகள் அல்லது கட்டுரைகள், பேட்டிகள் போன்றவை இதழின் உள்ளே அதன் உள்ளமைப்பில் அமைந்துள்ளது. பல வண்ணப்படங்கள் கொண்ட இதழில் முக்கியத் தலைப்புகளில் இடம்பெறும் செய்திகளுக்கு உரியவரின் படம் பெரிதாகவும், மற்றோரின் படங்கள் உள்ளடக்கச் செய்தியின் அளவினைப் பொறுத்து சிறிய அளவிலும், கட்டத்திலும் இடம்பெறுதலைக் காணமுடிகிறது.

ஒரு சில இதழ்களில் மைப்படத்துக்குத் தொடர்புடையோரின் படங்களை அவர்களின் தொடர்புநிலைகளின் அல்லது முக்கியத்துவத்திற்குத் தக்க வகையில் பெரிதும், சிறிதுமாகப் படைத்துக்காட்டுவது கல்கி இதழின் படவெளிப்பாட்டு முறையின் புதுமை என்றே கூறலாம். சான்றாக 4-04- 2004 -இல் வெளியான அட்டைப்படமானது இத்தன்மையுடனே அமைந்துள்ளது.

அட்டைப்படத்தில் முக்கியமான செய்திகளின் தலைப்போ அல்லது அச்செய்தி தொடர்பான வாசகங்களே இடம் பெறுவதுண்டு. அங்ஙனம் இடம்பெறும் செய்திகளில் முக்கியச் செய்திகளைத் தடிமனான எழுத்துக்களிலும், அவை இடம்பெறும் பகுதியினை சிறு கோடிட்டு அதன் பின் வெளியிடுதல் கல்கியில் அதிகமாகக் காணப்படுகிறது.

(எ.டு) "இலவசம் - சென்னை ஸ்கேன்

சென்னை வாசகர்களுக்கு மட்டும்"

(4-01-2004, அட்டைப்படம்)

"**உள்ளே.......**

| *Uti* |
|---|
| *இலவச போனஸ்* |
| *பக்கங்கள்* |

**விஜயேந்திரர்**

**என்ன செய்ய வேண்டும்**"

(26-12-2004, அட்டைப்படம்)

என்பன போன்று அட்டைப்படம் அமைவதுண்டு. முக்கியச் செய்திகளுக்கு அடுத்தநிலையில் உள்ள செய்திகளை சிறிய எழுத்துக்களில் அச்சடித்து வெளியிடுகின்றனர். (18-07-2004, அட்டைப்படம்)

கல்கி இதழுடன் இலவச இணைப்பாகக் கொடுக்கப் படுபவற்றின் விவரங்களை அட்டையின் மேல், கீழ், இடை, வலம், இடம் என ஏதாவது ஒரு இடத்தில் வெளியிட்டு விடுகின்றனர். இதில் குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டும் கொடுக்கப்படும் இலவச இணைப்புக்களுக்கு சிறிய அளவிலும், அனைத்து கல்கி வாசகர்களுக்கும் கொடுக்கப்படும் இலவச இணைப்புகளுக்கான விவரத்தை சற்று பெரிய அளவிலும் அட்டையில் இடம் பெறச்செய்துள்ளனர்.

கல்கியில் ஒருசில இலவச இணைப்புக்களுடன் கூடுதலாகக் கொடுக்கப்படும் இலவச இணைப்புக்களை 'போனஸ் பக்கங்கள்' என்று குறிப்பிட்டு அதனையும் அட்டைப்படத்தில் அதன் செய்தியை வெளியிடுகின்றது. கல்கி அட்டைப்படத்தில் இங்ஙனம் செய்தியை வெளியிடுவதை 26-12-2004 - இல் வெளியான இதழில் காணலாம்.

2004 - இல் வெளிவந்த அனைத்து கல்கிவார இதழிலும் முன் அட்டையின் இரண்டாம் பக்கத்தில் விளம்பரங்களே அமைந்துள்ளன. ஆனால் 18-07-2004 - இல் வெளிந்த கல்கி வார இதழில் மட்டும் இரண்டாம் பக்கத்தில் தஞ்சையின் பெரியகோயிலின் மாலைநேரப் புகைப்படமும், அதற்கான கவிதையும் வெளிவந்துள்ளது.

## பின்னட்டைப்பகுதி

பின்னட்டைப் பகுதியினையும் முதல்பக்கம், இரண்டாம் பக்கம் என்று பிரிக்க இயலும். இதனை முறையே இதழின் அட்டைப்பகுதியின் மூன்றாம் பக்கம், நான்காம் பக்கம் என்று குறிப்பிடலாம். அட்டையின் மூன்றாம் பக்கம் உள்புறமாகவே அமைந்துள்ளது. இப்பகுதியில் அனைத்து இதழ்களிலும் விளம்பரங்களே அமைந்துள்ளது. இவ்விளம்பரங்களில் பொதுவான விளம்பரங்கள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. எனினும் கல்கி குழுமம் சார்ந்து வெளியிட்டுள்ள

விளம்பரங்கள் ஒரு சில இதழ்களில் காணப்படுகின்றன. அட்டையின் நான்காம் பக்கத்தில் அனைத்து இதழ்களிலும் மேல்பகுதியில் சிறிய எழுத்துக்களில் இதழின் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கீழ்ப் பகுதியில் வணிக விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியே கல்கி இதழ் வெளிவருகின்றது.

கல்கியில் அட்டைப்படம் வெளியிடும் முறையானது தனித்துவமான அமைப்பு நிலைகளைக் கொண்டதாகும். அட்டைப்பட அமைப்பின் சிறப்புத் தன்மையைக் கருத்திற் கொண்டே ஒவ்வொரு வாரமும் பல்வேறுபட்ட தன்மைகளை உள்ளடக்கியதாய் படங்கள் வெளிவருகின்றன. மக்களின் மனநிலையினை அறிந்து ஒவ்வொரு வாரமும் பலதரப்பட்ட வகையில், பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கிய படமாக வெளிவருகின்றன. இம்மாதிரிதான் கல்கியில் அட்டைப்படம் அமையும் (அடிப்படையான கூறுகள் தவிர்த்த வண்ணப்படங்கள்) என்பதை முன்னரே கணிக்க இயலா வண்ணம் வெளிவருவதனால் மக்களின் எதிர்பார்ப்பை தூண்டுச் செய்வதுடன், அவர்களின் வாங்கும் ஆர்வத்தையும் தூண்டுவதாக கல்கியின் அட்டைப்படம் அமைந்துள்ளது.

சமூகப் பிரச்சினைகளை நிலைக்கலனாகக் கொண்டு வெளிவரும் இதழாக கல்கி இதழ் அமைந்துள்ளது. அதனால் சமூக நிகழ்வுகள் குறித்து தொடர்புடைய படங்களை வெளியிடுவது கல்கி இதழின் தன்மையாக அமைந்துள்ளது. குறிப்பாக தேர்தல் சமயங்களில் அனைத்துக் கட்சி தலைவர்கள் மற்றும் தேசத் தலைவர்களின் (கட்டத்துள்) படங்களை வெளியிடுவதும், மறைந்து போன இசைக்கலைஞர்கள் தொடர்பான நிகழ்வுகள் நடைபெறும் போது அவர்களின் படங்களை முழுப்பக்க அளவில் வெளியிடுவதும், பொதுவான நேரங்களில் திரைத்துறையைச் சார்ந்த நடிகர்கள் மற்றும் அத்துறை சார்ந்த பிறருடைய படங்களை வெளியிடுவதும், குறிப்பிட்ட சாதனையாளர்களின் படைப்புக்களை தன்னம்பிக்கை தரும் வகையில் வெளியிடுவதும் என அட்டைப்பட வெளியீட்டில் கல்கி இதழ் ஒரு தனித்த தன்மையிமைக் கொண்டு விளங்குகின்றது.

சில வார இதழ்களைப் போன்று மக்களைக் கவரும் நோக்கில் திரைத்துறையைச் சார்ந்த நடிகைகளின் ஆபாசப்படங்களை அட்டைபடத்தில் வெளியிடுவதில்லை என்பது

குறிப்பிடத்தக்கது. திரைத்துறை சார்ந்தோரின் படங்களை வெளியிடும் போதும் அது அட்டைப்படமானாலும் உள்பக்கங்களினாலும் ஆபாச உடைகளை அணியாத நிலையில் அமைந்துள்ள படங்களையே வெளியிடுவது கல்கி இதழின் தனிச்சிறப்பாகும்.

## கல்கி இதழின் அளவமைப்பு

மக்களின் தொடர்புக் கருவியாக விளங்கும் வார இதழ்கள் அவர்களின் மன ஓட்டத்தில் நிலையான இடத்தினைப் பிடிக்க பல்வேறு வெளியீட்டு உத்திகளைக் கையாளுகின்றனர். கல்கி இதழின் அளவமைப்பு உத்தி வெளிப்பாடாக அமைவது அதன் தோற்ற அமைப்பாகும்.

இதழ்களின் வெளித்தோற்றம் வாசகனின் மனதில் ஒரு கிளர்ச்சியினை ஏற்படுத்தவும், அவனை வாங்கத் தூண்டவும் செய்கிறது. இத்தகைய முக்கியப்பகுதியான வெளித்தோற்ற அமைப்பை ஒவ்வொரு இதழ்களும் தங்களுக்கே உரிய பாணியில் கட்டமைத்துக் கொண்டுள்ளன. அவை கால வளர்ச்சிக்கேற்ப மாற்றம் பெற்றும், பெறாமல் வருவதும் இதழ்களின் நிறுவனக் குழுமத்தின் தன்மையைச் சார்ந்ததாகும்.

எடுத்துக்காட்டாக கூற வேண்டுமானால் ஆனந்த விகடன் இதழ் முன்னைய அமைப்பில் இருந்து பல காலகட்டங்களில் பல மாறுதலைப் பெற்றுவந்துள்ளது. ஆனால் கல்கி இதழானது முன்னைய அமைப்பில் இருந்து இன்றுவரை எவ்வகையான ஒரு மாறுதலையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வார இதழும் வெளிப்புற அமைப்பில் தனித்தன்மையான அமைப்பு முறையைக் கொண்டிருக்கின்றன. சில வார இதழ்கள் நீளமாகவும், அகலமாகவும் காணப்படுகிறது. சில இதழ்கள் நீளம் குறைந்தும் அகலம் பெரிதாகவும், சில வேளைகளில் சிறிதாகவும் அமைவதுண்டு. ஆனால் கல்கி வார இதழ் நடுத்தரமான நீளமும், அகலமும் கொண்டு அமைந்துள்ளது. கல்கி இதழ் 9.5 அடி உயரமும், 6.25 அடி அகலமும் பெற்று அமைந்துள்ளது.

## கல்கி இதழின் அச்சு அமைப்பு

கல்கி வார இதழின் அச்சு அமைப்பானது மிக நேர்த்தியாக அமைக்கப்பட்ட வடிவமாகத் திகழ்கிறது. இதழ்களுக்கு அச்சு அமைப்பு என்பது மிகவும் இன்றியமையானததாகும். கல்கி இதழின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு களங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் கூடுதலான வரிகளாக **51** வரிகள் இடம் பெற்றுள்ளன, குறுகிய வரியமைப்புத் தன்மை மாறிமாறி அமையும். ஒவ்வொரு வரியிலும் 19 எழுத்துக்கள் முதல் 23 எழுத்துக்கள் வரை இடம் பெற்றுள்ளன. இவை உரையாடல் தன்மையில் அமையும் பகுதிகளிலும், கவிதைகள் இடம்பெறும் பகுதிகளிலும் அமையும் என்பதில்லை. உரையாடல் வடிவத்திற்கு ஏற்ப குறுகி வருவதை,

" என்னாலே இது

..................

இப்படிப் பண்ணிட்டியே?" (26-12-2004, ப.103)

கல்கி இதழின் பல பகுதிகளிலும் காணமுடிகிறது.

## தலையங்கம்

தலையங்கம் என்பது இதழின் தலையாய பகுதியாகும். இப்பகுதியில் சமூக , அரசியல் மற்றும் தனிமனித நிலைப்பாடுகள் குறித்து இதழ் ஆசிரியரின் கருத்துக்கள் இடம் பெறும். தலையங்கப் பகுதியனது இதழின் நோக்கத்துடன் தொடர்புடையது என்பதால் அதனை செம்மையுற அமைக்க வேண்டும். மேலும் தலையங்கச் செய்தியின் புற வடிவம் என்பது வாசகனின் மனத்தினைக் கவர்ந்து அவனை அப்பகுதிக்குள் ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். அவ்வகையில் கல்கி இதழின் தலையங்கத்தின் புற அமைப்பானது கருத்துப் படத்துடன் வளம்மிக்க பகுதியாக அமைந்துள்ளது.

2004 - இல் வெளிவந்த கல்கி வார இதழில் தலையங்கம் அதிக அளவில் இதழின் 13 – ஆம் பக்கத்திலேயே அமைந்துள்ளது. ஒரு சில இதழ்களைத் தவிர மற்ற அனைத்து இதழ்களிலும் இத்தன்மை காணப்படுவதை நோக்கும்போது கல்கி இதழ் தலையங்கத்துக்கு என பக்க வரைமுறைகளைப் பின்பற்றியுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும் தலையங்கம் மூன்று பக்கங்களை உடையதாய் அமைந்துள்ளது. தலையங்கத்தின் முதற்பக்கத்தில் தலையங்கப் பொருள் தொடர்பான கேலிச்சித்திரம் அப்பக்கத்தின் பாதியளவு இடம் பெற்றுள்ளது. அதனை அடுத்து தலையங்கத்தின் தலைப்பும் அதன் கீழ் ஆசிரியரின் தலையங்கச் செய்தியும் இடம் பெற்றுள்ளது. அத்துடன் கல்கியின் எப்பக்கத்திலும் செய்திகளுக்குக் கீழ் எந்த ஒருவரின் பாடலோ, தத்துவமோ எவையும் இடம் பெறாத போது தலையங்கத்தின் முதற்பகுதியில் மட்டும் பாரதியாரின் செழுமைமிக்க வரியொன்றினை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. மேலும் முதல்பக்கத்தின் வலப்பக்கத்தில் கட்டம் இட்ட பகுதியில் அமரர் கல்கியின் படமும் அதன் கீழ் சற்று தடிமனான பெரிய எழுத்தில் கல்கி இதழின் பெயரும், அதனை அடுத்து விநாயகரின் திருவுருவப் படமும், அதன் கீழ் இதழ் வெளியான ஆண்டு, மாதம் மற்றும் தமிழ் வருடத்தின் பெயரும் மாதமும் இடம் பெறுவதுடன், அது எத்தனையாவது மலர் மற்றும் இதழ் என்று குறிப்பிடவும் செய்துள்ளது.

கல்கியின் முதற்பக்கத்தின் இறுதியில் வலப்புறத்தில் இதழ் வெளியான தேதி, பெயர், பக்க எண் போன்றவை இடம் பெற்றுள்ளது (20 - 6 - 2004, ப.13). கல்கியின் தலையங்கத்தின் முதற்பக்கத்திலேயே கல்கி இதழ் குறித்தான செய்திகளை அறிந்து கொள்வதுடன், தலையங்கப் பொருளில் இன்ன செய்திகளைத்தான் முன்வைத்துள்ளனர் என்பதை கருத்துப்படமும் விளக்கி விடுகின்றது.

தலையங்கத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அதாவது பெரும்பான்மையும் 14, 15 – ஆம் பக்கங்களிலும் மேற்கூறியது போன்றே பக்கங்களின் சரிபாதியளவில் கேலிச்சித்திரம் இடம் பெற்றுள்ளது. தலையங்கத்தில் விமர்சிக்கப்படும் செய்திகளுக்குத் தொடர்புடைய கேலிச்சித்திரங்கள் இடம் பெறுகின்றன. பக்கங்களின் இறுதியில் வெளியான தேதியும் பெயரும்,

பக்க எண்ணும் இடம் பெறுகின்றன. 2004 - இல் வெளியான கல்கியின் அனைத்து இதழ்களிலும் (பக்க எண் தவிர்த்து) கேலிச்சித்திரக் கூறு ஒன்று போலவே அமைந்துள்ளது.

## விளம்பரம்

ஒரு இதழின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் பெரும்பங்கினை ஆற்றுபவை விளம்பரங்களே. இன்று விளம்பரங்கள் இல்லாத இதழ்களே இல்லை எனலாம். விளம்பரங்கள் ஒரு இதழின் பொருளாதாரத் தேவையினை நிறைவு செய்யும் காரணியாக மட்டும் செயல்படுவதில்லை. அவ்விதழின் நோக்கத்தினை எடுத்தியம்பும் ஒரு கருவியாகவும் செயலாற்றுகின்றது. அவ்வகையில் கல்கி இதழில் வெளியாகும் விளம்பரங்களின் புற அமைப்பானது கல்கியின் நோக்கத்தோடு ஒன்றிணையும் ஒரு காரணியாகவும் மாறியுள்ளதை காணமுடிகிறது.

கல்கியில் வெளியாகும் விளம்பரங்களில் பெரும்பான்மையும் முழுப்பக்க அளவிலான விளம்பரங்களாகவே இடம்பெற்றுள்ளன. ஒரு இதழில் 9 முதல் 12 வரையிலான முழுப்பக்க விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விளம்பரங்களில் அதன் தொடர்புடைய படங்கள் வெளியிடப்படுகின்றன. இருபக்க அளவிலான விளம்பரங்கள் குறைவாகவே இடம்பெறுகின்றது. அவை 3 முதல் 5 வரையிலான அளவே அமைந்துள்ளது. இரு பக்க விளம்பரங்கள் ஆடை விளம்பரங்களாகவோ சேவை அமைப்புக்களின் விளம்பரங்களாகவோ, மருத்துவ விளம்பரங்களாகவோ மற்றும் பக்தி தொடர்பான விளம்பரங்களாகவோ அமைந்துள்ளன.

ஆடை தொடர்பான விளம்பரங்களில் வண்ணப்படத்தின் அளவானது கூடுதலாகவும் மற்ற விளம்பரங்களில் படங்களின் அளவு குறைவாகும் அமைந்துள்ளது. கால் பக்க அளவிலான விளம்பரங்களில் படங்கள் பெரும்பான்மையும் இடம்பெறுவதில்லை. ஒரு சில இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. அரைப் பக்க அளவிலான விளம்பரங்களும் சில இடங்களில் படங்கள் இடம்பெற்றும், சில இடங்களில் இடம் பெறாமலும் வருகின்றன. அரைப்பக்க அளவிலான சேவை அமைப்புக்களின் விளம்பரங்களில் படங்கள் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முழுப்பக்க அளவிலான சேவை

அமைப்புக்களின் விளம்பரங்களில் சில விளம்பரங்களில் படம் இடம்பெற்றும் சிலவற்றில் இடம்பெறாமலும் வெளிவருகின்றன.

## படைப்புக்குத் துணைசேர்க்கும் படங்கள்

இதழ்களில் படங்கள் அமைக்கும் முறையானது வணிக நோக்கத்தின் அடிப்படையிலும், வாசகன் படைப்பினை வாசிக்கும் பொழுது எழும் மன இறுக்கத்தில் இருந்து தளர்த்தும் பொருட்டும், கருத்துக்களை முன்வைக்கும் பொருட்டும் வெளியிடப்படுகின்றன. இத்தகைய சக்திவாய்ந்த படஅமைப்பு முறையை கல்கி இதழ் செம்மையாகப் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.

ஒரு இதழில் வெளியாகும் படைப்புகள் எனும்போது அவை இலக்கியம் சார்ந்தனவும், இலக்கியம் சாராதனவும் (கற்பனை சார்ந்தனவும், கற்பனை சாராதனவும்) என பல நிலைப்பாடுகளைக் கொண்டதாய் அமையும். இதில் படைப்புக்கு வெளியிடப்படும் படங்கள் என்பவை அப்படைப்பு சார்ந்த படங்கள் அல்லது அப்படைப்புகளுடன் தொடர்புடைய படங்கள் என்னும் தன்மையில் வெளிவருவனவாகும்.

கல்கியில் அட்டைப்படத்தை அடுத்த முதல் பக்கத்திலேயே (பக்க எண் ஒன்றில்) படங்களை வெளியிடுகின்றனர். வெளிவரும் இதழின் தனித்த தன்மையில் அமையும் பகுதிகளின் அல்லது படைப்புக்களின் படங்களை பெரிய அளவிலும், வாசகர்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ள படைப்புக்களின் படங்களை சிறிய அளவிலும் கல்கி இதழ் வெளியிடுவதுண்டு (20-6-2004, ப.1). மேலும் உள்ளே கூறப்பட்டுள்ள செய்திகளுடன் தொடர்புடைய ஒரு சில படங்களை வெளியிடுவதும் கல்கியின் இயல்பு.

வாசகனை தொடர்ந்து இதழைப் படிக்க வேண்டும் என்ற தூண்டுதல் எண்ணத்தை வளர்க்கும் பொருட்டு அடுத்த இதழில் வெளிவரப் போகும் தொடர்களின் படங்களை அல்லது படைப்புக்களின் படைப்பாளர் படங்களை வெளியிடும் தன்மையினையும் (12-12-2004, ப.1) கல்கி இதழில் காணமுடிகிறது. அது போன்றே உள்ளடக்கப் பகுதிகள் ஒரு சில இதழ்களில்

காணப்படுவதில்லை. நேரடியாக கட்டுரைப் படைப்புகள் அல்லது வேறு சில பகுதிகள் அமையும் தன்மையினையும் (26-12-2004, ப.1) காணமுடிகின்றது.இதில் உள்ளடக்கப்பகுதியினை விட முக்கியத்துவம் நிறைந்த பகுதிகள் மட்டுமே முதற்பக்கத்தில் வெளியிடப் படுகின்றன. இவைபோன்று படைப்புகள் யாரைப் பற்றியனவே அவர்களின் படங்களை வெளியிடுவதில் மற்ற வாரப்பத்திரிகை முறையில் நின்று கல்கி இதழை தனித்துவப் படுத்தும் பகுதியாக இப்பகுதி அமைகின்றது.

## 2. தனிநிலை

தனிநிலை என்பது கல்கி இதழின் தனிப்பட்ட அமைப்பு நிலைகளை ஆராய்வதாகும். கல்கியின் தனிநிலைப் பகுதியில் கல்கி குழுமம் குறித்த செய்திகள், கல்கி குழுமத்தின் தனிப்பகுதிகள், திறனாய்வு மதிப்பீடுகள், துணுக்கு மற்றும் போட்டிச் செய்திகள் போன்ற அமைப்புகள் இதில் அடங்கும்.

## கல்கி குழுமத்தின் தனிப்பகுதிகள்

கல்கியின் குழுமத்தின் தனிப்பகுதிகள் என்பவை கல்கியின் கருத்துக்களையும், அவை சார்ந்த பகுதிகளையும், கல்கியின் வெளியீடுகள் தொடர்பான வாசகர்களின் விமர்சனப் பகுதிகளையும் வெளியிடும் பகுதியாக இப்பகுதி அமைகின்றது.

## தராசு பதில்கள்

'நீங்கள் கேட்டவை - தராசு' என்னும் பகுதியில் வாரந்தோறும் கேள்வி - பதில்கள் பகுதி இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் 10 முதல் 15 வரையிலான கேள்விகள் இடம்பெறும். இரண்டு அல்லது மூன்று பக்கங்கள் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு கேள்விகள் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே ரூ.100 மற்றும் ரூ.50 ரூபாய் என இரண்டு பரிசுகள் வழங்கப்படும். சம்பந்தப்பட்ட பிரபலங்களின் புகைப்படமோ, கேலிச்சித்திமோ இப்பகுதியில் இடம்பெறும்.

## செய்திகள் திரிப்பது செம்பியன்

செய்திகள் திரிப்பது செம்பியன் என்ற பகுதியானது நையாண்டியும், கற்பனையும் கலந்த செய்திப் பகுதியாகும். இப்பகுதி நான்கு அல்லது அதற்குமேல் செய்தியின் தன்மையினைப் பொறுத்து இதன் பக்கங்கள் அமையும். செய்தியுடன் தொடர்புடைய தலைவர்களின் புகைப்படமோ, நையண்டி வாசகத்துடனோ அல்லது அவர்களின் கேலிச்சித்திரமோ இடம்பெறும். இதில் உலக அரசியல், சினிமா போன்ற அனைத்து துறைகளைச் சார்ந்த தலைவர்களுடனும் செம்பியன் உரையாடுவது போன்று இப்பகுதி அமைக்கப்பட்டிருக்கும்

## திரைப்பட விமர்சனம்

திரைப்பட விமர்சனம் அனைத்து இதழ்களிலும் இடம்பெறுவதில்லை. திரைத்துறை தொடர்பான விமர்சனங்களை 'விஷுவல் தாசன்' என்ற பெயரில் இடம்பெறுகின்றது. ஒன்று அல்லது இரண்டு பக்கங்கள் விமர்சனம் இடம்பெறும். விஷுவல் தாசன் அல்லது மொக்கராசு ஆகிய புனைப்பெயர்களால் விமர்சனம் வெளிவரும். படத்தின் ஒரு காட்சியின் புகைப்படமோ அல்லது நடிகர்களின் படமோ இடம்பெறும். இவ்விமர்சனப்பகுதியில் மேற்பக்கத்தில் கட்டத்துள் அப்படத்தில் இடம்பெறும் வண்ணப் படம் ஒன்று இடம்பெற்றிருக்கும். கல்கி அனைத்துப் படங்களின் பிழை மற்றும் தவறுகளை சுட்டிக்காட்டி நெறிப்படுத்தும் பணியைச் செய்கின்றது.

## ஆசிரியர் பக்கம்

ஆசிரியர் பக்கம் அனைத்து வாரங்களிலும் வெளிவருவதில்லை. மிக முக்கமான நிகழ்வுகள் நிகழும்போது (கும்பபோணம் தீ விபத்து, 1-8-2004, ப. )மட்டும் அது குறித்த கருத்துப் பதிவாக இப்பகுதி இடம்பெறுகின்றது. இப்பகுதி ஒரு பக்க அளவிலேயே இடம்பெறுகின்றது. சில வேளைகளில் இதற்கு பொதுவான கேலிச்சித்தரமும் இடம்பெறுவதுண்டு.

## இரண்டு,மூணு விஷயம்

இரண்டு, மூணு விஷயம் என்பது வாசகர் பகுதியாகும். இரண்டு பக்க அளவில், நான்கு அல்லது ஐந்து வாசகர்களின் கடிதங்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

## வட்டமேஜை

வாசகர் கடிதங்கள் 'வட்டமேஜை' என்ற பெயரில் வாரந்தோறும் கல்கியில் வெளிவருகின்றது. கல்கியின் இதழ் வெளியீடுகள் குறித்து வாசகர்களின் கருத்துக்களாக இப்பகுதி அமைந்துள்ளது. இரண்டு பக்க அளவிலான வாசகர் பகுதியில் முந்தைய கல்கி இதழின் அட்டைப்படம் கட்டத்துக்குள் இடம்பெற்றிருக்கும்.

## நடக்கும் மென்பார் நடக்கும்

கல்கி இதழில் வாரப்பலனாக இராசி பலன்கள் வாரந்தோறும் அனைத்து இதழ்களிலும் இடம்பெறகின்றது. அக்னிசர்மா என்ற பெயரில் ஒவ்வொரு வாரமும் இப்பகுதி வெளிவருவதுடன், ஒரு பிரபலமான மனிதர்களின் படத்தையும், அவர் இராசியினையும் குறிப்பிட்டு பெட்டிச்செய்தியுடன் வெளிவருகின்றது.

## வாசகர் போட்டி பகுதிகள்

கல்கி இதழில் பல வகையான வாசகர் போட்டிகள் வெளிவருகின்றன. அரசியல், திரைத்துறை, பொது அறிவு தொடர்பான போட்டிகள் இதில் இடம்பெறுகின்றது. அமரர் கல்கி குறித்தான பரிசுப் போட்டியில் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்ற தலைப்பில் இப்போட்டி இடம்பெறுகின்றது. இதில் அதற்கான விதிமுறைகளும், பரிசுத்தொகையும், போட்டியின் தன்மையும் விளக்கமாக இடம்பெற்றிருக்கும். அப்பகுதி ஒருபக்க அளவில் வெளிவருகின்றது.

'மார்க் போடு தலைவா' என்னும் இப்பகுதி அரசியல் தலைவர்களுக்கு மதிப்பெண்கள் இடும் பகுதியாகும். இதில் குறிப்பிட்ட அரசியல் தலைவர்களின் கேலிச்சித்திரங்கள் இடம்பெற்றிருக்கும். பத்துத் தகுதிகளும், அவற்றிற்கான மதிப்பெண்களும் அடங்கிய அட்டவணை மற்றும் முகவரி எழுத தனிப்பெட்டியும் இருக்கும். மொத்த பக்கத்தை வெட்டுவதற்கான அடையாளமும் இடம்பெற்றிருக்கும்.

'குவிஸ் போட்டி' என்னும் இப்பகுதி மொத்தம் ஆறு பொது அறிவுக் கேள்விகளுடன் வாரந்தோறும் வெளிவருகின்றது. இப்போட்டிப் பகுதியிலும் போட்டிக்கான விதிமுறைகள், போட்டிக்கான கூப்பன் போன்றவையும் இடம்பெற்று ஒரு பக்க அளவில் வெளிவருகின்றது.

## வலைபாயுதே

இணையதளங்களைப் பற்றி அலசும் பகுதியாக வலைபாயுதே என்னும் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் பேசப்படுகின்ற செய்திகளுடன் தொடர்புடைய வலைதளங்களின் முகவரியுடன் இப்பகுதி வெளிவருகின்றது. மேலும் ஒரு பக்க அளவில், பிரவுசர் என்ற பெயரில் எழுதப்பபடுகின்றது. ஒரு வாரத்தில் நான்கு அல்லது ஐந்து வலைதளங்கள் குறித்த செய்திகள் இடம் பெறுகின்றன.

## புக் பேங்க்

புதிதாக வெளிவரும் புத்தகங்கள் பற்றிய செய்திகளை உள்ளடக்கியதாய் இப்பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் நூலின் விலை மற்றும் பதிப்பக முகவரியோடு ஒரு பக்க அளவில் அமையப் பெற்றுள்ளது. இப்பகுதி விஷ்வக் என்ற பெயரில் எழுதப்படுகின்றது.

## மார்க் போடலாம் வாங்க

மார்க் போடலாம் வாங்க என்ற இப்பகுதி மாணவர்களின் திறனை வளர்க்கும் பகுதியாக வெளிவருகின்றது. மாணவர்களின் நினைவாற்றலை அதிகப் படுத்தும் வழிமுறைகள் பற்றியும்,

அவர்களை ஒழுக்கத்தில் சிறந்த மனிதர்களாக உருவாவதற்கு தேவையான பயிற்சிகள் பற்றியும், சுயமுன்னேற்றத்தை எங்ஙனம் வளர்த்துக் கொள்வது என்பது பற்றியும், மதிப்பெண்களை சுலபமாக பெறும் வழிமுறைகள் எவையெனக் கற்றுக்கொடுக்கும் பகுதியாகவும் இப்பகுதி தொடர்ந்து கல்கியில் வெளிவருகின்றது.

கல்கி இதழின் புறக்கட்டமைப்பானது கல்கியின் இதழ் வளர்ச்சிக்கு பெருந்துணைபுரியும் பகுதியாக அமைந்துள்ளது. மேலும் கல்கியின் புற அமைப்பு நிலைகள் அதன் பொருள்சார்ந்த கூறுகளில் தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்துள்ளது. கற்பனை சார்ந்த படைப்புகளின் புற அமைப்பானது. அதன் அக அமைப்பினை செழுமைப்படுத்தும் பகுதியாகவும். வாசகனை படைப்புக்குள் உள்ளிழுக்கும் பகுதியாகவும் அமைந்துள்து. அத்துடன் படைப்பினைக் கண்டவுடன் அது எத்தகைய பொருளினைப் பேச விளைகின்றது என்பதனை எடுத்துக்காட்டும் பகுதியாகவும் அமைகின்றது. கற்பனை சாரா படைப்புகளின் புற அமைப்பு நிலைகளானது அவை வெளிப்படுத்தும் செய்தியுடன் தொடர்புடையதாகவும், அவற்றின் இயல்பினை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

## தொகுப்புரை

- வாரப்பத்திரிகைகள் இலக்கிய வளர்ச்சிக்கென பெரும்பங்கினை ஆற்றிவருவதோடு மக்களை தொடர்வாசிப்பில் ஈடுபடுத்தவும், சமுதாய நடைமுறைச் சிக்கல்களை அறிந்து கொள்ளவும், மக்களின் நினைவாற்றலையும், கற்பனைத்திறனையும் வளர்க்க உதவிபுரிகின்றன.
- 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இதழ்கள் வெறும் செய்தினைக் கூறும் இதழ்களாக மட்டும் அல்லாமல் சமயம், இலக்கியம் கலை, கட்டுரை பற்றிய செய்திகளையும் வெளியிட்டன.
- இதழ்களின் அமைப்பை அவை அமையும் பொருள் மற்றும் வடிவம் சார்ந்த விதத்தினை அடிப்படையாகக் கொண்டு இதழ்களின் புற வடிவம். இதழ்களின் அக வடிவம் என பிரித்துணர இயலும்.
- குமுதம் மற்றும் ஆனந்த விகடன் இதழின் புறக்கட்டமைப்பானது இலக்கியம், திரைத்துறை, விளம்பரம்,அதன் பொதுத்தன்மைகள் என்ற நிலையில் பிரித்துணர இயலும்.
- கல்கியில் புற நிலைகளை ஆராயும் போது அவற்றின் பொருண்மைசார்ந்த நிலைப்பாடுகளை தொடர்பு படுத்தியும், அவற்றை விலக்கி நிறுத்தியும் இரண்டு நிலைகளில் ஆராய வேண்டியுள்ளது.
- கல்கியில் புற அமைப்பு நிலைகளை கற்பனை சார்ந்த படைப்புகளில் புற அமைப்பு, கற்பனை சார படைப்புகளில் புற அமைப்பு என பிரித்துக்காண முடியும்.
- வார இதழான கல்கி இதழில் கற்பனைசார் புற அமைப்பை இலக்கியம் சார்ந்தன, இலக்கியம் சாராதன என வகைப்படுத்தலாம்.
- கற்பனை சார் இலக்கியங்கள் என்பவை குறுநாவல், சிறுகதை, கவிதை போன்றவைகளாகும்.

- கல்கியின் நாவல் வெளியீடுகளை ஆராயும் போது அவை சரித்திர நாவல் வெளியீடு, சமூக நாவல் வெளியீடு என இரண்டு வகையான தன்மைகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது.
- சரித்திர நாவல்களின் புறக் கட்டமைப்பானது பக்க அமைப்பினையும். வெளிப்பாட்டு முறையினையும் அடியொற்றியதாகும்.
- அமரர் கல்கியின் சரித்திர படைப்புகள் வெளியாகும் இதழ்களில் பெரும்பாலும் இதழ்களின் முதல் பகுதியிலோ, இறுதிப்பதியிலோ இடம் பெறமால் இதழின் மையப்பகுதி சார்ந்தே அவை வெளியிடப்பட்டுள்ளன. மேலும் பத்து பக்கங்கள் அவரின் நாவலுக்கு ஒதுக்கப்படுகின்றன.
- அமரர் கல்கியின் சரித்திர நாவல் அல்லாத சரித்திர நாவல்கள் கல்கி இதழில் ஐந்து பக்கங்களும், சில சமயம் அதற்கு குறைவாகவும் இடம்பெற்றுள்ளன.
- சமூக நாவல்கள் கல்கியில் இடம்பெறும் போது அவை குறைந்த அளவில் பக்க வரையறைகளை உடையதாகவும், அதிக அளவில் படங்கள் இடம் பெறாததாகவும் வெளிவருகின்றன.
- கல்கியில் வெளியாகும் சிறுகதைகள் 2 முதல் நான்கு பக்கங்களை உள்ளடக்கியதாகவும், கதை வெளியாகும் முதற்பக்கத்தில் கதை தொடர்பான வரைபடங்கள் முதல், இடை, கீழ் என ஏதாவது ஒரு இடத்தில் இடம்பெறுவதாகவும் வெளிவந்துள்ளன.
- தனிக்கவிதைகள் என்பவை இதழ்களில் பல்வேறுபட்ட கவிஞர்களின் தனிப்பட்ட கவிதைகளை வெளியிடுதல் என்னும் தன்மையில் அமைந்து வருகின்றது. தனிக்கவிதைகள் சில குறிப்பிட்ட காலகட்ட நிகழ்வினை முன்வைப்பது போன்று வெளிவரும் போது அதற்கான கேலிச்சித்திரமும் வெளியிடப்படுகின்றது.
- தொகுப்புக் கவிதைகள் என்பவை குறிப்பிட்ட கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்ட கவிதைகளை தொடர்ந்து வெளியிடுவதாகும். தொடர் நாவல்கள் போன்று இவை தொடர் கவிதைகளாகும்.

- கல்கியில் வெளியாகும் கட்டுரைகள் கலை,அரசியல், சமூகம், வணிகம், அறிவியல், திரைத்துறை, மருத்துவம், விளையாட்டு, விவசாயம், பக்தி என்று பன்முகத் தன்மையினைக் கொண்டதாய் வெளிவந்துள்ளது.
- வார இதழ்களின் கற்பனை சாரா படைப்புக்களின் புற அமைப்பானது பொது நிலையில் அட்டைப்படம், அளவு, அச்சு, தலையங்கம், விளம்பரம், படைப்புக்குத் துணை சேர்க்கும் படங்கள் என ஒன்றிணைந்தும், கல்கி குழுமம் குறித்த செய்திகள், கல்கி குழுமத்தின தனிப்பகுதிகள், திறனாய்வு மதிப்பீடுகள், துணுக்குச் செய்திகள் போன்ற தனிப்பட்ட நிலைகளில் வேறுபட்டும் காணப்படுகின்றன.
- ஆனந்தவிகடன், குமுதம் போன்ற இதழ்கள் தமிழகத்திற்கான விலையையும், பிற மாநிலங்களுக்கான விலையையும் தனித்தனியாக அச்சிட்டுள்ளன. ஆனால் கல்கி இதழில் இவ்வமைப்பினை காண இயலவில்லை.
- திரைத்துறையைச் சார்ந்த நடிகைகளின் ஆபாசப்படங்களை அட்டைபடத்தில் வெளியிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- கல்கி இதழின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு களங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் கூடுதலான வரிகளாக 51 வரிகள் இடம் பெற்றுள்ளன. குறுகிய வரியமைப்புத் தன்மை மாறிமாறி அமையும். ஒவ்வொரு வரியிலும் 19 எழுத்துக்கள் முதல் 23 எழுத்துக்கள் வரை இடம் பெற்றுள்ளன.
- கல்கி இதழின் தலையங்கத்தின் புற அமைப்பானது கருத்துப் படத்துடன் வளம்மிக்க பகுதியாக அமைந்துள்ளது. இதில் முதற்பக்கத்தின் இறுதியில் வலப்புறத்தில் இதழ் வெளியான தேதி, பெயர், பக்க எண் போன்றவை இடம் பெற்றுள்ளது. கல்கி இதழின் புறக்கட்டமைப்பானது கல்கியின் இதழ் வளர்ச்சிக்கு பெருந்துணைபுரியும் பகுதியாக அமைந்துள்ளது. மேலும் கல்கியின் புற அமைப்பு நிலைகள் அதன் பொருள்சார்ந்த கூறுகளில் தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்துள்ளது.